# போராட்டம்

2014 நவம்பர் - டிசம்பர் இதழ் 17 இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு 20.00 ரூபா

# இடதுசாரி மாற்றீடொன்றுக்கான வெளி வியாபகம் பெற்றுள்ளது

**எங்கும் மக்கள் மத்தியில் நெருக்கடிகள் ஆழமாகிக் கொண்டிருக்கின்றன. நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நவதாராளமயத்தின் தாக்குதலுக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இலங்கை மக்கள். நவதாராளமயம் தனது இரண்டாவது இன்னிங்ஸை துரிதமாக ஆடிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், இலங்கை மக்கள் மத்தியில் இடதுசாரி மாற்றீடொன்றிற்கான இடைவெளி விசாலமாகி வருகின்றது.**

தங்களால் முடிந்த சிறந்த வரவுசெலவுத்திட்டம் என நாமகரணம் சூட்டி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினூடு வழங்கப்பட்ட பருக்கையளவான நிவாரணம் நிமித்தம் எழுந்த சமூக உரையாடல்கள் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அது துளியும் போதாதென்பதை நிரூபிக்கின்றது.

மீரியபத்த அனர்த்தம், ரத்துப்பஸ்பல, ஹன்வெல, ஹபரதுவ பிரதேசங்களில் சுற்றுச்சூழல் சேதமடைதலுக்கு எதிரான மக்களது போராட்டங்கள், மிகத்துரிதமாக பரவிவரும் சிறுநீரக நோய் என்பன பாரதுாரமான சுற்றுச்சூழல் நெருக்கடிகளின் வெளிப்பாடுகளாக உள்ளன. இவை மக்கள் மத்தியில் பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. மக்கள் மத்தியில் பெரியவர்களான நான்கில் ஒருவர் உளநலப் பாதிப்புக்கு உட்பட்டு இருப்பதுவும், தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையில் உலகநாடுகளுக்கிடையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதும் இவற்றுக்கு உதாரணங்களாக குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்த சூழ்நிலையில், கட்சி தற்காலிக தீர்வுகளுக்கு பதிலாக, சமூக மாற்றத்திற்கான உண்மையான அரசியலுக்காக அதிகரித்துவரும் சமூக இடைவெளியை அவதானிக்கின்றது. ஒரு இடதுசாரி மாற்றீடு என்ற யோசனையைப் பலப்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள், அமைப்பின் எல்லாவகை முன்னரங்குகளிலும், கல்வி, பிரச்சாரம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், தேர்தல்கள் என எங்கும் முன்னெடுக்கப்படும் என கட்சி தீர்மானம் கொண்டுள்ளது.




சமூகம் என்கின்ற அளவில் கடப்பதற்கு நீண்ட வழி எம்முன்னுள்ளது. ஆனால், இன்றுவரையும் நிலவிவருகின்ற அழிவின் பாதையில் அல்லாமல், ஒரு புதிய பாதையில் அடியெடுத்து வைக்க வேண்டும். அந்தப் பாதையில் எடுத்து வைக்கும் ஒரு இடதுசாரி முதல் தடம் இதுவாகும். இந்த முதல் தடம் குறித்து அனைத்து ஒடுக்கப்படும் மற்றும் முற்போக்கு மக்கள் அணிகளுக்கிடையிலான கருத்தரங்கு 20 ம் திகதி புதிய நகர மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

# இடதுசாரி மாற்று

## நாடுதழுவிய தொடரான கருத்தரங்குகள்

இடதுசாரிகளின் பாதை - சவாலினை முகங்கொள்ளும் வர்க்கத்தின் முன்னுள்ள தீர்வு என்ற கருப்பொருளில் நாடு முழுமையும் ஒரு தொடரான கருத்தரங்குகளை நடாத்துவதற்கு கட்சி தயாராகி வருகின்றது. வெளிநாட்டுக் கொள்கை, இனப்பிரச்சனை, பொருளாதாரம், அரச கட்டமைப்பு போன்ற தற்போது உரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சனைகளுக்கு இடதுசாரி மாற்றீட்டினை தருவது என்பதே அதனது நோக்கமாகும். இந்த தொடர் கருத்தரங்குகள் 8 ம் திகதி நவம்பர் சனச மண்டபம், களுத்துறையிலும் மற்றும் நாட்டின் ஏனைய நகரங்களிலும் நடாத்தப்பட இருக்கின்றன. ஒவ்வொருவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள வைப்பதின் மூலமும் இடதுசாரிய சக்திகளை பலப்படுத்துவதன் மூலமும் தான் நெருக்கடிகளுக்கு ஒரு உண்மையான தீர்வொன்றினை கண்டுகொள்ள முடியும் என கட்சி கருதுகிறது.


அவர்கள் அமைதியாக அடக்கமாகிவிட்டனர்



3

4



சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் சந்திரகுமார். மற்றும் யோகராஜனுக்கு நடந்தது என்ன

11



மக்கள் மீண்டும் 56 ஹர்த்தால் பாதையில் முன்செல்வார்களா?

# அனைத்துச் சமுதாயத்தினருக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் இந்த ஒடுக்குமுறையை நாங்கள் கண்டிக்கின்றோம்!

**தோழர் புபுது ஜயகொட**

கல்வியை தனியார்மயப்படுத்தலுக்கு ஆதரவளித்து வாதிடுவோர் ஆகக்குறைந்தது மாலபே தனியார் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையாவது வெளியிட வேண்டும் என தான் சவால் விடுவதாக முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரச்சாரச் செயலர் புபுது ஜெயகொட தெரிவித்தார். எல்லா சமூக சக்திகளையும் இணைத்துக் கொண்ட ஒரு ஐக்கியப்பட்ட போராட்டத்தின் வழியிலே தான் நீடித்த வெற்றிகளை வென்றெடுக்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். இராஜகிரிய எம்.டி.டி.ஆர் மண்டபத்தில் கடந்த ஒக்டோபர் 22 ம் திகதி நடந்த ஊடக மாநாட்டில் இக்கருத்தினை அவர் தெரிவித்தார்.

முன்னிலை சோஷலிசக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் தோழர் சுஜித் குருவித்தவும் இவ் ஊடக மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார்.

தனக்குச் சவாலானதும், தன்னை நோக்கி கேள்வியெழுப்பும் அனைத்துப் போராட்ட சக்திகளையும் ஒடுக்குவதற்கு அரசாங்கம் பிரயத்தனம் செய்கின்றது. இந்த ஒடுக்குமுறைகளுக்கு சிறந்த உதாரணமானவை 20 ம் திகதி மீன்பிடித் தொழிலாளர்களும் மற்றும் 21 ம் திகதி மாணவர்களும் எதிர்கொண்ட ஒடுக்குமுறைகளாகும். மீன்பிடித் தொழிலாளர்கள் முன்னெடுத்த போராட்டம் குண்டர்களால் கல்லடி தாக்குதலுக்கு உள்ளானது. பல தொழிலாளர்கள் காயப்பட்டும் வேறும் சிலரது மண்டைகள் கற்களால் காயப்படுத்தப்பட்டும் ஒடுக்குமுறைகள் நடந்தேறின. இயந்திர மீன்பிடிப் படகுகளின் தொழில்நுட்ப தொழிலாளர்களால் இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அவர்களுடைய கோரிக்கை என்ன? அவர்கள் ஒரு நியாயமான கோரிக்கையொன்றினை முன்வைத்தே போராடினார்கள். இலங்கையின் கடற்பரப்பில் தொழிற்படுவதற்கு வெளிநாட்டு பன்னாட்டுக் கம்பனிகளுக்கு சொந்தமான படகுகளுக்கு அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. இலங்கைக் கடற்பரப்பில் பிடிக்கப்படும் பிடிபாடுகளை இலங்கைக்குள் எடுத்துவந்து இலங்கையின் பெயரிலேயே அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடைமுறை நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் மீன்பிடித் தொழிலாளர்கள் நீண்டகாலமாக ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அரசாங்கம் அவர்களது கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை. இறுதியில் என்ன நடந்தது? அடுத்த வருடம் தை மாதம் 15 ம் திகதியிலிருந்து இலங்கையிடமிருந்து மீன் இறக்குமதியை நிறுத்தப்போவதாக ஐரோப்பிய யூனியன் முடிவெடுத்தது.

எங்கள் மீன்பிடித் தொழிலாளர்கள் இலங்கையின் கடற்பரப்பின் எல்லை தாண்டி தொழிற்புரிவதாலேயே இத் தடை ஐரோப்பிய யூனியனால் கொண்டுவரப்பட்டது என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனரத்த கூறுகிறார். இது ஒரு மோசடியான பொய்யாகும்.

இலங்கையில் மீன்பிடிக்கின்ற போது, அங்கீகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மீறப்படுவதாலேயே இத்தடை அமுலாக்கப்பட்டது என உத்தியோகபூர்வமாக ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது. தீங்கான முறைகள் எதனையும் தடைசெய்வது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும். கடலடிச்சூழலுக்கு தீங்கு தரும் முறைகள் சாதாரண மீன்பிடித் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவதில்லை. தேவையான தொழில்நுட்பதிறனைக் கொண்டுள்ள பாரிய பன்னாட்டு நிறுவனங்களாலேயே இந்தக்கடலடி வளங்களை அழிக்கும் தீங்கான முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐரோப்பிய யூனியனுடனான பிரச்சனை இலங்கை கடற்பரப்பு வெளிநாடுகளுக்கு திறந்துவிடப்பட்டமையால் விளைந்ததே. இலங்கையா அல்லது வெளிநாடா என்பதல்ல இங்கு கேள்வி. சாதாரண மக்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள கடல்வளங்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது. இதனையே நாங்கள் எதிர்க்கின்றோம். மறுபக்கத்தில், அப்படிப்பட்ட நிறுவனங்களால் நாட்டிற்குள் கொண்டுவரப்படும் மீன்கள் இலங்கையின் பெயரிலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதிக்கான தரத்தைப் பேணாததால் இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் மீன்களின் தரம் ஐரோப்பிய யூனியனின் சந்தையில் வீழ்ச்சி பெற்றதே இந்தத் தடைக்கான காரணம் என மீனவர்கள் கூறுகிறார்கள். ஏற்றுமதிக்காக தரம் உயர்ந்த மீன்களை இலங்கை மீனவர்கள் தெரிவு செய்கிறார்கள். உள்நாட்டுச் சந்தையில் குறைந்தவிலையில் தரத்தில் குறைந்த மீன்கள் விற்கப்படுகின்றன. அவை ஏற்றுமதிக்காக தெரிவு செய்யப்படுவதில்லை. அந்நிய கம்பனிகள் உள்நாட்டுச் சந்தையைக் கொண்டிராததால், தரத்தைப் புறக்கணித்து எல்லாவற்றையும் அவர்கள் ஏற்றுமதி செய்கிறார்கள். தற்போது இந்தக் காரணத்தால், பல பத்தாயிரம் மீனவர்களின் பிழைப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் அது பல பிரச்சனைகளில் ஒன்று மட்டுமே. முதன்மைக் காரணம் என்னவெனில், சுற்றுலாத்துறையை முதன்மைப்படுத்துவதன் மூலம் மீன்பிடித்துறையினை அழிக்கும் அரசாங்கத்தின் கொள்கையே ஆகும். தேசிய பௌதீக திட்டத்தின் படியே இந்த விஷயங்கள் நடக்கின்றன. எல்லா மீன்பிடித் தொழிலாளர்களும், சமூகப் போராட்ட சக்திகளும் தேசிய பௌதீக திட்டத்தினை ஒருமித்து நின்று எதிர்க்கவேண்டும்.

## மாணவர் ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் தாக்குதல்!

கடந்த 21 ம் திகதியன்று உழைப்பாளர்களுக்கான ஊதியத்தை அதிகரிக்கக் கோரியும், மஹாபொல புலமைப்பரிசிலை அதிகரிக்கக் கோரியும், பாடசாலைகளில் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கெதிராகவும், தனியார் பல்கலைக்கழகங்களுக்கெதிராகவும் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர். பொலீஸார் இந்த ஆர்ப்பாட்டத்தில் மேற்கொண்ட தாக்குதல், 20 மாணவர்கள் காயப்படும் அளவுக்கு போய் முடிந்தது. அவர்களில் இரண்டு மாணவர்களின் கால்கள் முறிந்து போய்விட்டன. அவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அதேவேளை, இந்த மாணவர் கிளர்ச்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலரைக் கோரும் கடிதம் ஒன்று மாலபே தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களின் பெயரால் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. விசாரணைக்குள்ளாக்கப்பட வேண்டிய தொன்றாக இந்தப் போலிப் பல்கலைக்கழகம் இருக்கின்றது. மாலபே பல்கலைக்கழகத்திலிருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட, கல்வியை தனியார்மயப்படுத்தலுக்கு முன்னிற்பவர்களால் சரியாகக் கூறமுடியாதுள்ளது. கடந்த வாரம் 890 மாணவர்கள் இருப்பதாக ஊடகங்களுக்கு சொன்னார்கள். 2012 ம் ஆண்டு வெளியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, 2012 ம் ஆண்டளவில் 755 மாணவர்கள் இருந்தார்கள். கடந்த இரண்டு வருட காலத்தில் ஆக 100 மாணவர்கள் மட்டுமா இதுவரை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார்கள்? வருடத்தில் இருதடவைகள் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஏன் மாணவர்களின் எண்ணிக்கையை மறைக்கின்றார்கள்? உயர்தர கல்வித் தராதரம் இல்லாத அனேக மாணவர்கள் இங்கு அனுமதிக்கப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

கல்வியைத் தனியார்மயப்படுத்தலுக்கான ஒரு கேள்வி மட்டுமல்ல இது. மக்களது வாழ்க்கை பற்றிய கேள்வி. தகுதியற்ற வைத்தியர்கள் மூலம் மக்களது வாழ்க்கை ஆபத்துக்குள் தள்ளப்படுகிறது. முகாமைத்துவ பட்டங்கள் வழங்கும் என்று கூறியே முதலீட்டு அதிகார சபையின் அங்கீகாரத்தினை இந்த மாலபே தனியார் பல்கலைக்கழகம் பெற்றுக் கொண்டது. பின்னர், தாதியர் கல்விப்பயிற்சி நடக்கவிருப்பதாக கூறியதன் மூலம் இந்தக் கல்வி நிறுவனத்தின் பெயர் சூட்சுமமாக மாற்றப்பட்டது. மருத்துவக் கல்விக்கான பட்டங்களை வழங்குவதற்கு அனுமதி கூட பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு அனுமதியினை வழங்குவதை நாங்கள் கூட எதிர்க்கின்றோம். ஆனால் இது இன்னும் ஒரு மோசமான காரியமாகும். மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்படும் மூன்று விடயங்களும் தவறானவையாகும். தவறான தகவல்களைக் கொண்டிருக்கின்ற விளம்பரங்களை காண்பித்ததன் மூலம் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் 65 இலட்சம் ரூபா திரட்டப்பட்டது. இது ஒரு மோசடியாகும். மோசடிக்காக சக்விதியை கைது செய்தார்கள் எனின், நெவில் பெர்னாண்டோவை ஏன் கைது செய்யவில்லை? இது ஏனெனில், அரசாங்கத்தின் கொள்கை தனியார்மயப்படுத்தலே. இந்த விடயங்கள் பொய்கள் எனக் கூறுபவர்கள் எவரையும் நாங்கள் விவாதம் ஒனறுக்கு வருமாறு சவால் விடுகிறோம். எங்களிடம் பெயர்ப்பட்டியல் உள்ளது. இவற்றை எதிர்க்கின்றபோது அந்த மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். தேசிய பௌதீக திட்டத்தின் ஒரு பகுதி தான் கல்வியை தனியார்மயப்படுத்துதல் என்பது. ஆகவே, இதற்கு எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் இணையுமாறு மாணவர்களை நாங்கள் கோருகின்றோம். இந்தப் போராட்டத்திற்காக, ஜனநாயகத்துக்காகப் போராடும் எல்லா சக்திகளும் தங்களை ஒன்றாய் இணைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கட்சியாக, நாங்கள் இந்த எல்லாச் சக்திகளையும் ஒன்றிணைப்பதற்கு தயாராக இருக்கின்றோம். அத்தோடு எங்களை ஒரு விவாதத்தில் ஈடுபடுத்தவும் தயாராக உள்ளோம்.

# நவம்பர் மாவீரர்களின் 25வது வருட நினைவுகூரலுக்கு முன்னதாகவே மக்களுடனான சந்திப்பு

நவம்பர் மாவீரர்களின் 25வது வருட நினைவுகூரலுக்காக நாடு தழுவிய நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படும் எனக் கட்சி தீர்மானம் கொண்டுள்ளது. அதற்கிணங்க, நவம்பர் முதலாம் தேதியிலிருந்து தொடங்கி, 80 களின் இறுதியிலிருந்து ஒடுக்குமுறையின் உச்சத்தை அனுபவித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்களைச் சந்திப்பதற்கும் அவர்களுடன் ஒரு உரையாடலை உருவாக்கவும், நாட்டின் அப்பிரதேசங்களுக்கு செல்வதனை கட்சி எதிர்பார்த்திருக்கின்றது. நினைவுகூரல் நிகழ்வுகள் 13ம் திகதி நவம்பர் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி அனுஷ்டிக்கப்பட இருக்கின்றது.

"நீங்கள் இன்னும் உயிருடன் இருக்கிறீர்கள்! என்ற கருப்பொருளின் கீழ் நவம்பர் மாவீரர்கள் தினம் நிகழ்த்தப்படுகின்றபோது, தனியாக கவனமெடுக்கப்பட வேண்டிய அரசியல் படிப்பினைகள் மேல் கவனம் செலுத்தப்படும்.

# அவர்கள் அமைதியாக அடக்கமாகிவிட்டனர்



**“ தோட்டத்தில் வேலை இல்லை. அதனால் அநேகமானோர் வீடுகளிலேயே இருந்தனர். குழந்தைகளும் வீடுகளிலேயே இருந்தனர். பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றிருந்தனர். ”**







“அப்போது நேரம் காலை 7.30 மணியிருக்கும். நான் வெளியில் இருந்தேன். மேலிருந்து சிறிய சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்க்கும் போது அம்மா மண்குவியலால் தள்ளிச் செல்லப்படுகிறார். அயலவர்கள் கதறிக்கொண்டு ஓடுகின்றனர். நான் பாய்ந்து அம்மாவைக் காப்பாற்றினேன். இந்த சமயத்தில் நான் கழுத்தளவுக்கு மண்ணில் புதைந்து விட்டேன். நான் உரத்துக்கதறினேன்”

ஒக்டோபர் 29 ம் திகதி மீரியபத்த மண்சரிவு அனர்த்தத்தில் உயிர்தப்பியவர்களில் ஒருவரான 23 வயதான சாந்தி என்னும் இளம்பெண், பண்டாரவளை அரசினர் வைத்தியசாலை கட்டிலில் படுத்திருந்தபடி தெரிவித்தார். அவரது உடல் பூராவும் உரசல் காயங்கள் காணப்பட்டது. சாந்தி மேலும் கூறுகையில், “மழை காரணமாக தோட்டத்தில் வேலை இல்லை. அதனால் அநேகமானோர் வீடுகளிலேயே இருந்தனர். குழந்தைகளும் வீடுகளிலேயே இருந்தனர். பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றிருந்தனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் மண்சரிவு ஏற்பட்டது” என்றார்.

இந்தப் பிரதேசம் மண்சரிவு அபாயத்துக்கு உட்பட்ட பிரதேசம் என்பதை நீங்கள் முன்னமே அறிந்திருக்கவில்லையா என்ற கேள்விக்கு, “தோட்ட அதிகாரிகள் 28 ம் திகதி காலை எமது குடியிருப்புப் பகுதியை பார்வையிட்டுச் சென்றனர். அவர்கள் எமக்கு எதுவும் சொல்லவில்லை. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சில அதிகாரிகள் வந்து இந்தப் பிரதேசத்தில் மண்சரிவு ஆபத்து இருப்பதால் எம்மை இங்கிருந்து இங்கு இடம்பெயரும்படி கூறினார்கள். அப்போது நாம் எங்கு செல்வது எனக் கேட்டோம். அதற்கு அவர்கள் எமக்கு வேறு இடம் தருவதாக கூறினார்கள். ஆனால் அது நடக்கவில்லை” என்றார்.

சாந்தியின் பாட்டன் பாட்டி பற்றிய தகவல்கள் இதுவரை இல்லை. இவர்களுடன் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 150 பேருக்கும் அதிகமாக இருக்கும். இவர்கள் அனைவரும் பெருந்தோட்டத்தொழிலாளர்கள் ஆகும். மண்சரிவு இடம்பெற்ற பகுதியில் 330 பேர் வரை குடியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 70 குடியிருப்புக்கள் முற்றாக மண்ணில் புதைந்துவிட்டன. குடியிருப்புகள் இருந்த பகுதிக்கு மேலாக கிட்டத்தட்ட 15 மீற்றர் உயரத்துக்கு மண் மூடிக் காணப்படுகிறது. அகதிகளாக 800 க்கும் மேலானவர்கள் கொஸ்லந்த தமிழ் மகாவித்தியாலயத்திலும், பூனாகல தமிழ் வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தரைப்படை, விமானப்படை, விசேட அதிரடிப்படையினருமாக 500 க்கு மேற்பட்ட பாதுகாப்புப்படையினர் புதன்கிழமை காலையிலேயே மீட்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட போதும், சீரற்ற காலநிலையால் மாலைவரை மீட்புப்பணிகளில் ஈடுபட முடியாமல் போனது. மீண்டும் வியாழக்கிழமை காலை மீட்புப்பணிகள் ஆரம்பமாகின. தேசிய வீடமைப்பு நிர்மாண ஆய்வுத் திணைக்களத்தின் மண்சரிவு அனர்த்தப்பிரிவு பணிப்பாளர் கலாநிதி. காமினி ஜெயதிஸ்ஸ வின் கூற்றுப்படி 2005, 2011 ம் ஆண்டுகளில் இப்பகுதி மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதனால் அங்குள்ள மக்களை அங்கிருந்து இடம்பெயரும்படி அறிவுறுத்தி

**“ இங்கு கவனித்தக்க விடயம் என்னவெனில், இந்த மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு பிரதேச சபை, மாகாணசபை, பாராளுமன்றம் என மக்கள் பிரதிநிதிப் பதவிகளை அலங்கரிக்கும் உறுப்பினர்கள் இந்த விடயத்தில், அனர்த்தம் நடக்குமென அறிந்திருந்தும் அலட்சியமாய் இருந்திருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் இந்த மனிதப் பேரழிவுக்கு பொறுப்பேற்க வேண்டிய முதல்தரப்பினராக மேற்குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகளே காணப்படுகிறார்கள். ”**

இருந்ததாக தெரிவிக்கின்றார். இது தொடர்பில் சில ஊடகங்களில் அப் பகுதி மக்கள் இந்த அறிவுறுத்தலை ஏற்க மறுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இந்த மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புக்காக மாற்று இடம் வழங்கப்பட்டதாக பிரதேசச் செயலர் தெரிவிக்கின்றார். இங்கு வசிப்பவர்கள் அநேகமானோர் பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஆவர். இந்த மக்களுக்கு மாற்று இடமாக வெறும் நிலம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு குடியிருப்புக்களை வழங்கப்பட்ட நிலத்தில் அமைப்பதற்கு எந்தவித ஏற்பாடுகளும் இருக்காததுடன் மானிய உதவிகளும் வழங்கப்படவில்லை. வசதிபடைத்த 30 குடும்பங்கள் வரையில் மாற்றிடத்தில் சுயமாக வீடுகளைக் கட்டி குடியேறினார்கள். சுயமாக குடியிருப்புக்களை கட்டக்கூடிய வசதியற்ற ஏழை எளிய பெருந்தோட்டத் தொழிலாளர்களே தொடர்ந்தும் இந்த ஆபத்தான பகுதியில் போக்கிடம் அற்ற நிலையில் வாழும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருந்தனர். இந்த மக்களே இந்த அனர்த்தத்தில் இரையாகியுள்ளனர் என்பது வேதனைக்குரியதாகும்.

இங்கு கவனித்தக்க விடயம் என்னவெனில், இந்த மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு பிரதேச சபை, மாகாணசபை, பாராளுமன்றம் என மக்கள் பிரதிநிதிப் பதவிகளை அலங்கரிக்கும் உறுப்பினர்கள் இந்த விடயத்தில், அனர்த்தம் நடக்குமென அறிந்திருந்தும் அலட்சியமாய் இருந்திருக்கிறார்கள். எனவே இந்த விடயத்தில் இந்த மனிதப் பேரழிவுக்கு பொறுப்பேற்க வேண்டிய முதல்தரப்பினராக மேற்குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகளே காணப்படுகிறார்கள். மலையகத்தில் மண்சரிவு அனர்த்தம் இத்துடன் முற்றுப்பெறவில்லை. மலையகத்தின் மேலும் பலபகுதிகளில் மண்சரிவு ஆபத்துக்கான அறிகுறிகள் இருப்பதாக தேசிய வீடமைப்பு நிர்மாண ஆய்வுத் திணைக்களத்தின் மண்சரிவு அனர்த்தப்பிரிவின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். எனவே வெறுமனே அரசாங்கத்தின் மீது மட்டும் பழியைப் போட்டு அவ்வப் பகுதிகளுக்குரிய மக்கள் பிரதிநிதிகள் தமது கடமையை தட்டிக் கழித்து விட முடியாது. அதேவேளை அரசாங்கமும் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் உரிய மாற்று நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும்.

தேவையான அனைத்து வளங்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு மக்கள் நல அரசாங்கத்தின் பொறுப்பாகும். மக்கள் நலனில் அக்கறையற்ற அரசாங்கம் வெறுமனே அனர்த்தங்கள் நடந்த பிற்பாடு சம்பவ இடங்களுக்கு சென்று துக்கம் விசாரிப்பதும் நீலிக் கண்ணீர் வடிப்பதும் சுத்த ஏமாற்றுத்தனமாகும். இந்தச் சம்பவம் ஏழை எளிய மக்களுக்கு ஒரு பெரும் உண்மையை வெளிப்படுத்தி சென்றிருக்கின்றது. அதாவது மக்கள் தமக்கான ஒரு அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைய வேண்டுமென்பதே அச் செய்தியாகும்.

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் சந்திரகுமார் யோகராஜாவுக்கு நடந்தது என்ன?

சப்ரகமுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தை கண்டித்து அஜித்குமார பா.உ பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்.

2014-08-03 ஆம் திகதியும் அதற்கு முன்பிருந்தும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் எதிரான அடக்குமுறைகள், ஜனநாயக உரிமை மறுதலிப்புகள் மற்றும் அவர்களது கற்றல் உரிமைக்கு இடையூறான நடவடிக்கைகள் விரிவடைந்து வருகின்றன. எனவே இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தினதும் நாட்டு மக்களினதும் கவனத்தை ஈர்த்துக்கொள்வதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வுக்கான பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என நான் நம்புகின்றேன்.

தற்போதைய அரசாங்கம் கல்வியை விற்பனை பண்டமாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்காக பல்வேறு தந்திரோபாயங்களையும், அதற்கு தேவையான சட்டதிட்டங்களையும் அமுல்படுத்துவதிலும் முனைப்பு கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு எதிராக புத்திஜீவிகள், கல்விமான்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழிற்சங்க தலைவர்கள், பெற்றோர், தேசப்பற்றுள்ள மக்கள் ஆகியோர் கல்விக் கொள்ளைக்கு எதிராக அணிதிரள்வதை தோற்கடிக்க அரசாங்கம் பல்வேறுவிதமான அடக்குமுறைகளையும் சூழ்ச்சிகளையும் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. இவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் நடந்துள்ளது. இச் செயல்பாடுகளை கல்வியை விற்பனைப் பொருளாக்கும் நிகழ்ச்சிநிரலை இலகுபடுத்திக் கொள்ள அரசாங்கம் கையாளும் தந்திரோபாயமாகவே நாம் கருதவேண்டும்.

குறிப்பாக சுதந்திரக் கல்வியை பாதுகாப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடும் அனைவரிடமும் நான் கேட்டுக் கொள்வது இதனை தனித்த ஒரு சம்பவமாக கருதாமல், இதனை அரசாங்க செயற்திட்டங்களின் ஒரு அங்கமாக கருதவேண்டும் என்றாகும். சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் சமூக மொழிக் கல்விப்பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவனான கிளிநொச்சி முகமாலையை சேர்ந்த சுதர்சன் சந்திரகுமார் முதலாம் ஆண்டு மாணவர்களுக்குரிய சாந்தபண்டார விடுதியில் தங்கியிருந்தார். இவர் 2014.08.03 அன்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இவரை ஐந்துபேர் கடுமையாக தாக்கியதுடன் கூரிய ஆயுதத்தினால் உடலில் கீறல்காயங்ளையும் ஏற்படுத்தியுள்ளனர். தாக்கியபின்னர் அவரை வெளியே போட்டுவிட்டு சென்றுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான சந்திரகுமார் பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நான் இந்த உரையை தயார் செய்யும்போது அவர் இரத்தினபுரி வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனாலும் அவரை இரத்தினபுரி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பொலிஸார் சட்டவிரோதமாக தடுத்துவைத்திருப்பதாக அறிகிறேன். இந்த சம்பவம் நடந்த அதே தினம் இரவு தமிழ் மாணவர்களை 10 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறுமாறு அச்சுறுத்லுடனான எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டது. இதுதொடர்பாக 2014.08.10 ஆம் திகதி வெளியான "ஜனரல" என்னும் சிங்கள வாரப்பத்திரிகை வெளியிட்ட செய்தியை ஹன்சாட் பதிவுக்காக சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

தமிழ் மாணவ, மாணவியருக்கு தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட எச்சரிக்கை சுவரொட்டியும் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்டிருந்தது. அதில் 10 நாட்களுக்குள் தமிழ் மாணவ மாணவிகள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறாவிட்டால் மாணவர்கள் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காவர் எனவும், மாணவிகள் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டிருந்தது. 2014-07-11 ஆம் திகதியும் இதேபோன்ற எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இந்த பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பிரிவினர் இருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த பாதுகாப்பு பிரிவிரை அகற்றி, அதைவிட மூன்றுபங்கு அதிகரித்த கட்டணத்தில் கோட்டபாய ராஜபக்ஸ வின் பாதுகாப்பு நிறுவனமான "ரத்னா லங்கா" பாதுகாப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சந்திரகுமார் தாக்கப்பட்ட இடத்தில் இருந்து 10 மீற்றர் தொலைவில் இருந்த பாதுகாப்பு ஊழியர்கள் சொல்கிறார்கள் மாணவன் தாக்கப்பட்டதை தாம் காணவில்லை என்று. பல்கலைக்கழக வளாகத்தில் சுவரொட்டி ஒட்டுகிறார்கள் அது பாதுகாப்பு பிரிவினருக்கு தெரியாது. எனவே அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

தாக்கப்பட்ட மாணவன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 40 நாட்கள் மட்டுமே ஆகிறது. அந்த பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் இல்லை, அல்லாவிட்டால் பகிடிவதை என கதை அளந்திருப்பார்கள். எஸ்.பி. திஸ ாநாயக்கா இருந்திருந்தால் நிச்சயமாக இந்த சம்பவத்தை பகிடிவதை என்றே கூறியிருப்பார். பல்கலைக்கழக உபவேந்தர் சொல்கிறார் அந்த மாணவன் தன்னை தானே தாக்கிகொண்டதாக. இது புதுமையான கதையளப்பல்லவா? இது போன்ற கதைகளை முன்னரும் நாம் கேட்டிருக்கிறோம். இதை யார் சொல்கிறார் பல்கலைக் கழகத்துக்கு பொறுப்பான உபவேந்தர் கூறுகிறார்.

இத்துடன் நிற்கவில்லை 2014-08-05 சமூக மொழிக் கல்வி பரீட்சை எழுதிக் கொண்டிருந்த வவுனியாவை சேர்ந்த யோகராஜா நிரோஜன் என்ற மாணவன் 11.30 மணியளவில் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசித்த பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் கடத்தி செல்லப்படுகிறார். இது நடந்தது நிர்வாகத்தின் உதவியுடனாகும். நாங்கள் இந்த பாராளுமன்றத்தில் கேட்கிறோம் நான்கு நாட்களுக்குமுன் சம்மந்தப்பட்ட மாணவனின் வீட்டுக்கு சென்று விபரங்கள் பெறப்பட்டது யோகராஜா செய்த குற்றம் என்ன? யார் முறைப்பாடு செய்தார்கள்? குற்றச்சாட்டு என்ன? இப்போது சொல்கிறார்கள் அவர் புனர்வாழ்வு நிலையத்தில் இருக்கிறார் என்று. பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்ட, பயங்கரவாதத்திற்கு தலைமை தாங்கியவர்கள், புனர்வாழ்வு பெறாதவர்கள் இந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். புனர்வாழ்வு பெற்று வெளியேறிய யோகராஜா எந்த முறைப்பாடுகளுமின்றி, பிடியாணையும் இல்லாமல் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த சமயத்தில் பயங்கரவாத தடுப்புப்பிரிவினரால் கடத்திச் செல்லப்படுகிறார். இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முறையிட சென்ற கபிலன், மனோஜ் என்ற மாணவர்களுக்கு நிர்வாகம் கொடுத்த பதில் "இது உங்களுக்கு அவசியமற்றது நீங்கள் உங்களுடைய வேலையை மட்டும் பாருங்கள்" என்பதாகும் இம் மாணவர்கள் இருவரினதும் அடையாள அட்டையை பாதுகாப்பு பிரிவினர் வாங்கிக் கொண்டனர். நீங்கள் என்ன செய்ய முயல்கிறீர்கள்?

பல்கலைக்கழக மாணவர் பிரதிநிகள் இது தொடர்பாக உபவேந்தரிடம் வினவியபோது அவர்களை அவர் பேசி துரத்தினார். இதையடுத்து மாணவர் பிரதிநிதிகள் சமநல பொலிஸ் நிலையம் சென்று யோகராஜா தொடர்பாக விசாரித்தார்கள். அங்கு கிடைத்த பதில் இனி யோகராஜாவை நீங்கள் காணமுடியாது, வேண்டுமானால் அவரது பெற்றோரை வரச்சொல்லுங்கள் என்றாகும். இவ்விடயத்தில் முன்னணியில் செயல்பட்ட தமயந்த சம்பத்குமார என்ற மாணவனின் வீட்டுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பொலிசார் அவரது பெற்றோருக்கு விடுத்த எச்சரிக்கைதான் முடிந்தளவு விரைவாக மகனை பல்கலைக்கழகத்தில் இருந்து விலக்கிக் கொள்ளுங்கள், அல்லது நாங்கள் அவரை ஐந்துவருடம் சிறைக்கு அனுப்புவோம் என்பதாகும். இதேபோன்ற எச்சரிக்கை நான்காவது வருட கற்கைநெறி மாணவன் நிரோஷன் என்பவரின் பெற்றோருக்கும் விடுக்கப்பட்டுள்ளது.


இந்த நிலைமைகளுக்கு மத்தியிலும் 07 ஆம் திகதி சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி சப்ரமுவ பல்கலைக்கழக அனைத்து மாணவர்களும் ஒன்றிணைந்து இந்த அராஜகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கைக்கு சில தினங்கள் முன்பதாக அப்பிரதேசத்தில் இனவாதத்தை உசிப்பிவிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அப்பிரதேச மக்கள் அந்தப் பொறியில் சிக்கவில்லை. அதற்காக நாங்கள் அப்பிரதேச மக்களுக்கும், மாணவர்களுக்கும் எமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது நடந்திருப்பது என்ன? 507 நாட்களுக்கு மேலாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதுபற்றி மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து பெற்ற உத்தரவு உபவேந்தரால் 132 நாட்கள் மீறப்பட்டுள்ளது. தற்போது மாணவர் மீதான அடக்குமுறையை தொடர்வதற்கு வசதியாக இனவாதத்தை உசுப்பிவிட முயற்சிக்கப்படுகிறது. இந்த நிலைமைக்கு பாதுகாப்பு அமைச்சும், அதன் செயலாளரும், பல்கலைக்கழக உபவேந்தரும் பதில் சொல்லியாக வேண்டும்.

பயங்கரவாதத்தில் ஈடுபடுபவர்கள் யார். இந்த அரசாங்கம் பின்பற்றும் நவலிபரல்வாத முதலாளித்துவ பொருளாதார முறைமைக்கிணங்க கல்வியை விற்பனைப் பண்டமாக மாற்றியமைக்கும் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப சட்ட திட்டங்களை அமுல்படுத்த தயாராகும் சந்தர்ப்பத்தில், மாணவர் போராட்டங்கள் காரணமாக பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே மாணவர்களை இனவாத ரீதியில் பிளவுபடுத்தி மாணவ சமூகத்தின் போராட்ட சக்தியை சீர்குலைக்கும் தந்திரோபாய திட்டத்திற்கிணங்கவே பல்கலைக்கழக மாணவர்கள் பலியாக்கப்படுகிறார்கள்.

> **"பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்ட, பயங்கரவாதத்திற்கு தலைமை தாங்கியவர்கள், புனர்வாழ்வு பெறாதவர்கள் இந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். புனர்வாழ்வு பெற்று வெளியேறிய யோகராஜா எந்த முறைப்பாடுகளுமின்றி, பிடியாணையும் இல்லாமல் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த சமயத்தில் பயங்கரவாத தடுப்புபிரிவினரால் கடத்திச் செல்லப்படுகிறார"**





மார்க்சியம் - 17

# உழைப்பில் இருந்தான ஓய்வு எதற்காக?

விளம்பர உலகில், பொருளை வாங்குவதற்காக மட்டும் விளம்பரங்களைச் செய்வதில்லை. மாறாக தன்னைத்தான் முன்னிறுத்தி விளம்பரம் செய்வதையும், அதை மனித பண்பாடாகவும், வாழ்க்கை முறையாகவும் கூட மாற்றுகின்றது. அதாவது விளம்பரம் செய்யும் பொருளை அடைவதன் மூலம், அதைக் கொண்டு தன்னை விளம்பரம் செய்யும் நுகர்வாக்கப் பண்பாட்டை, தனிவுடமை சமூக அமைப்பு இன்று உருவாக்கி இருக்கின்றது. உலகமயமாக்கல் என்பது உற்பத்தி மற்றும் சந்தை மட்டுமல்ல, பொருளை நுகரவும் அதை வெளிப்படுத்தும் பண்பாட்டையும் உருவாக்குகின்றது.

மனிதன் தன் அடையாளத்தை இந்த சமூக அமைப்பில் நிலைநிறுத்திக்காட்ட, சந்தை முன்தள்ளும் விளம்பர பொருள் இன்றி சாத்தியமில்லை என்று கருதுமளவுக்கு மனித வாழ்க்கைமுறையையும், அறிவையும் குறுக்கி இருக்கின்றது. மனித தேவையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைக்கு பதில் ஆடம்பரப்பொருளை முதன்மையாக்கி, அதை அடைவதற்காக போராடுமாறும், அதற்காக ஓய்வின்றி உழைக்குமாறும் கோருகின்றது.

தனி மனிதனை முன்னிறுத்திய நுகர்வாக்கத்தையே சமூகசாரமாக மாற்றுவதையே, மனிதனைச் சுற்றி அனைத்து கருத்தியல் மற்றும் வாழ்வியல் செயற்பாடுகள் முன்னெடுக்கின்றது. இந்த வகையில் இந்த அமைப்பை பாதுகாக்கும் துப்பாக்கிகள் முதல் ஊடகங்கள் வரை, ஒரே நேர்கோட்டில் இயங்குகின்றது. இதன் மூலம் மனிதனின் மனிதசாரத்தை அழித்து மலடாக்கப்படுவதன் மூலம் நுகர வைக்கப்படுகின்றான்.

மனிதனுக்கு கிடைக்கும் ஓய்வு என்பது நுகருவதற்கானதே என்ற வாழ்வியல்முறை உருவாகி வருகின்றது. மனிதப் பண்பாடானது தனிமனித நுகர்வாக்கமாகவும், அதை வெளிப்படுத்துவதே மனிதசாரமுமாகின்றது.

மனிதன் போராடிப் பெற்ற ஓய்வு, அதிகமாக உழைத்து நுகர்வதற்கு தடையாக இருப்பதாக கருதுமளவுக்கு, மனிதவாழ்க்கையையும் அறிவையும் குறுக்கி ஓய்வின்றி உழைக்க வைக்கின்றது. தேவைக்காக உழைத்த மனிதன் இன்று தன் ஆடம்பரத்துக்காகவும், அதைக் காட்டிக் கொள்ளவும் உழைக்கின்றான். இப்படி உழைப்பு சுரண்டப்படும் விதம், மனிதப்பண்பாட்டு வடிவம் பெறுகின்றது. அதேநேரம் உழைத்து வாங்கும் பொருளை அனுபவிக்க கூடமுடியாது, ஓய்வின்றி உழைக்கின்றான். தற்பெருமையை பேசுவதற்கே பொருள் என்ற எல்லைக்குள், வாங்கிக் குவிக்கும் பொருளின் பயன்பாடு குறுகி விடுகின்றது. ஓய்வின்றி உழைத்து வாங்கும் பொருட்கள் தனக்கே சொந்தமான போதும், அது வாழ்க்கை நடைமுறையிலிருந்தும் அன்னியமாகி விடுகின்றது.

இறுதியில் பொருள் பயன்பாட்டுத் தன்மை இழந்து, தன்னை முதன்மைப்படுத்திக் காட்ட பயன்படும் பொருட்களாக மாறி, வாழ்க்கைக்கு பயன்பாடற்றதாகி கழிவாகிவிடுகின்றது. இன்று சுற்றுச்சூழலை அழிப்பதில் இந்த ஆடம்பர பண்பாடு தான், மிகப் பெரிய பங்கை ஆற்றுகின்றது. உதாரணமாக எமது திருமணங்களை எடுங்கள். அன்றைய நிகழ்வுக்கு பயன்படுத்தும் பொருட்களில் பெரும்பாலானவை மறுபயன்பாட்டுக்கு உள்ளாவதில்லை. குறிப்பாக பெண்கள் அன்றைய நாளுக்கு என்று வாங்கியவற்றை அநேகம், மீளப் பயன்படுத்துவதில்லை. இதன் அர்த்தம் பெண்களின் நடத்தை பற்றியதல்ல, மாறாக ஒட்டுமொத்த அமைப்பும் விளம்பர உலகில் பலியாக்கப்பட்டு இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

குறித்த பொருளை வாங்க உழைக்கும் நேரமும், உழைப்பின் சுமையும் சொல்லிமாளாது. ஆனால் சுயநலமும், பெருமை பேசும் தற்பெருமைவாதமும் சந்தையின் ஆன்மாவாக, அது ஒவ்வொருவருக்குள்ளும் ஆவியாக இறங்கி இயங்குகின்றது. இப்படி மனிததேவை கடந்த அனைத்தும், விளம்பரம் செய்யும் நோக்கில் நுகர்வாக்கமாகவும், அதை தானும் அனுவிப்பதான போலிப் பிரமைக்குள், மொத்த வாழ்க்கை முறையையும் குறுக்கி வருகின்றது. இந்த போலியான பெருமை பேசும் வாழ்க்கை முறைக்காகவே, மனிதனை ஓய்வின்றி இன்று உழைக்க வைக்கின்றது.

எட்டு மணி நேர வேலை, வாரத்திற்கு இரண்டு நாள் ஓய்வு, வருடத்தில் ஆறு வார ஓய்வு, ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு...என்று, தனிவுடமையிலான உழைப்பு சுரண்டலுக்கு எதிராக மனிதன் போராடிப் பெற்ற உரிமைகள் இவை. இன்று சில நாடுகளில் அல்லது சில தொழில்துறைகளில், இந்த உரிமைகளை உழைக்கும் வர்க்கம் கொண்டிருப்பதைக் காணலாம். உழைப்பு என்னும் கொடிய சுரண்டல் முறையில் இருந்து ஓய்வைக் கோரி, மனிதன் போராடிய வரலாற்றுக் கணங்களையே மே தினம் முழிப்பாக இன்றும் பறைசாற்றி நிற்கின்றது.

மனிதன் போராடிப் பெற்றிருக்கக் கூடிய இந்தக் குறைந்தபட்ச உரிமைகளைக் கூட பெற முடியாத, மிகக் கொடூரமான கொடிய சுரண்டலுக்குள் உலகில் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் வாழ்கின்றனர். எங்கு அதிக கொடூரமும் சுரண்டலும் காணப்படுகின்றதோ, அங்கு மூலதனம் குவிகின்றது. இன்றைய உலகமயமாதலிலாலான மூலதன நகர்ச்சியானது, மனிதனின் உழைப்பு மீதான அடிப்படை உரிமைகளை மறுக்கும் இடங்களை நோக்கியதானதாக உள்ளது.

ஏற்றத்தாழ்வான சுரண்டல் முறையில், இன்னும் இன்னும் அதிகமாகச் சுரண்டுவதற்காகவே மூலதனம் முனைகின்றது. போராடிப் பெற்ற உழைக்கும் வர்க்க உரிமைகளை பறித்தெடுத்து, சுரண்டுவதற்கான முயற்சியிலேயே சுரண்டும் வர்க்கம் சதா ஈடுபடுகின்றது.

இதற்கேற்ப பொருளை முதன்மைப்படுத்திய நுகர்வுப் பண்பாட்டை உருவாக்கி, அதிக நேரம் அதற்காக உழைக்குமாறு தூண்டும் உளவியல் தன்மையை உருவாக்கிவிடுகின்றது. இதற்கேற்ற வகையில் சுரண்டலுக்கு எதிரான சமூக உணர்வை மனிதனில் இருந்து அகற்றும் வண்ணம், அவனை தனிமனிதனின் தற்பெருமை சார்ந்த நுகர்வுக் கனவுலகிற்குள் வாழுமாறு வாழ்க்கைமுறை மாற்றுகின்றது. இந்த வகையில் மனிதன் போராடிப் பெற்ற ஓய்வை, தனது சொந்த சுரண்டல் நிகழ்ச்சிநிரலுக்குள் கட்டுப்படுத்துகின்றது.

தொலைக்காட்சி, இணையம், தொலைபேசி, சந்தை அங்காடிகளுக்குள் (சொப்பிங் சென்ரர்)... ஓய்வைக் கழிக்குமாறு தூண்டிவிடுகினறது. இதன் மூலம் பொருளை முதன்மையாக்கி அதை அடைவதற்கான தற்பெருமையுடன் கூடிய சுயநல நுகர்வை தூண்டி விடுகின்றது. தன் சுயநலனுக்கு வெளியில் உலகைப் பார்க்க முடியாதவனாக மாற்றிவிடுகின்றது. இதன் மூலம் தன்னையும், தன் சமூகத்தையும் பற்றிச் சிந்திப்பதைத் தடுத்து நிறுத்திவிடுகின்றது.

பொருளை அடைவதற்காக போராடு, இதுதான் ஓய்வின் போது மனிதனுக்கு புகட்டப்படுகின்றது. இதன் மூலம் மனிதனை ஓய்வின்றி, இன்னும் அதிகமாக உழைக்குமாறு கோருகின்றது. இதன் மூலம் பொருளை அடைவதற்கு தடையான ஒன்றாகவே ஓய்வைக் காணுமாறு வைக்கின்றது.

வாழ்வு பற்றி சமூக அறிவு - எளிமை - தேவையை மறுத்து, சுயநலம் - விளம்பரம் - ஆடம்பரத்தில் மூழ்குமாறும், சமூக உணர்வற்ற தற்பெருமைக்குள்ளும் சுய கற்பனைக்குள்ளும் வாழ்க்கை குறுக்கப்பட்டு வருகின்றது.

உதாரணமாக சமூகத்தில் தொடர்ச்சியாக நீடிக்கும் இன்றைய கொண்டாட்டங்களில், இதை தெளிவாகக் காணமுடியும். கொண்டாட்டம் என்பது இன்று தன்னை முன்னிலைப்படுத்தி காட்டுதற்கான ஒன்றாகவே, திரிபடைந்து வருகின்றது. அதன் வெளிப்பாடானது சந்தைப் பொருளைக் கொண்டு, தன்னை முன்னிறுத்திக் காட்டிக் கொள்ளும் தற்பெருமை வாதமாகி வருகின்றது. இதற்குள் கொண்டாட்டங்கள் முடங்கிவிடுகின்றது.

நவீன விளம்பரச் சந்தை எதை முன்னிறுத்தி விளம்பரம் செய்கின்றதோ, அதைக் கொண்டு தன்னை அலங்காரப்படுத்துவதே கொண்டாட்டமாகின்றது. இந்த நிகழ்வின் பொது சாரமாக, ஒவ்வொரு மனிதனும் தன்னை முன்னிறுத்துகின்றான். அதாவது தன்னை தற்பெருமை மூலம் முன்னிறுத்திக் காட்டும் எல்லையைத் தாண்டி, கொண்டாட்டங்கள் இன்று கொண்டாடப்படுவதில்லை என்று கூறலாம். சமூகத்தன்மை சார்ந்த எவையும், கொண்டாட்டத்தில் இன்று காண முடியாதவையாகி வருகின்றது.

கொண்டாட்டங்களைச் சுற்றிய அனைத்தும், அங்கு பங்குகொள்ளும் மனிதர்களுக்கு தொடர்பற்றதாகி விடுகின்றது. அனைத்தும் வியாபாரிகளைக் கொண்டு நடத்தும் செயற்பாடாக புரிந்து கொள்ளும் அளவுக்கு, சமூகத்தன்மையை மனிதனில் இருந்து அகற்றி வருகின்றது. கொண்டாட்டங்கள் கொண்டிருந்த சமூக அறங்களும், மனிதப் பண்பாடுகளும் வாழ்வில் இருந்து காணாமல் போகின்றது.

வியாபாரிகளின் சந்தைத் தேர்வு, அதற்கு இடையில் உள்ள வேறுபாட்டை தம்மில் வெளிக்காட்டும் தற்பெருமைவாதமே கொண்டாட்டமாகி வருகின்றது. கொண்டாட்டத்தை சுற்றிய அனைத்தும், கொண்டாடும் மனிதனின் சொந்தத் தேர்வல்ல. மாறாக விளம்பரப் பொருட்கள் கொண்டாட்டத்தை அலங்கரித்து விட, அதையே கொண்டாட்டமாக கொண்டாட வைக்கின்றது.


ஆக கொண்டாட்டங்கள் இன்று மனிதர்களால் கொண்டாடப்படுவதில்லை. விளம்பரங்களையும், வியாபாரங்களையும் அடிப்படையாக கொண்ட பொருட்களை முன்னிறுத்தி அதையே கொண்டாட்டமாக்கி இருக்கின்றது. இதை வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக, பணத்தைக் கொடுத்தால் சரி என்பதைத் தாண்டி, அந்த கொண்டாட்டத்தில் பங்குகொள்ளும் மனிதனின் செயல் முடிந்து போகின்றது.

தன் தற்பெருமை மூலம் தன்னை முன்னிறுத்திக் காட்டுவதற்காக விளம்பர உலகில் தேடுதலையும், அது சார்ந்து அறிவையும் பீறிக் கொள்ளுவதும் நடந்தேறுகின்றது. இதன் மூலம் மற்றவருக்கு சவால் விடும் வண்ணம் பொருட்களை தேடிக் கண்டு அடையும் குறுகிய வக்கிரமான வாழ்க்கை முறைக்குள், மனித வாழ்க்கையும் ஓய்வும் புதைந்து விடுகின்றது.

மகிழச்சியை தனி நுகர்வாக, தற்பெருமை

14 ஆம் பக்கம் பார்க்க...

# இடதுசாரிகளும் சமவுரிமை இயக்கமும்




தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட, தமிழ் தேசியப் போராட்டம் முடிவுக்கு வந்த 2009 யுத்தத்தின் பின்னான காலத்தில், அப்போராட்டத்தை தொடர்வதற்கான பலவகையான அரசியல் வழிமுறைகள் புலம்பெயர் தேசங்களில் விவாதிக்கப்படுகின்றன. பெரும்பான்மையான புலிகளின் புலம்பெயர் முன்னணி நிறுவனங்கள், ஏற்கனவே அவர்களின் மத்தியில் உருவாக்கப்பட்ட அரசியற் சிந்தனைக்கேற்ப, மேற்கு ஏகாதிபத்திய நாடுகளைச் சார்ந்து நின்று தமிழ் ஈழத்தைப் பெறுவதே தமது அரசியல் நடைமுறையாகக் கொண்டுள்ளனர். இதற்கு வெளியில் உள்ள இடதுசாரியம் பேசும் உதிரிகளும், சிறு சிறு குழுக்களும் அவர்களின் இணையங்களும், மேற்படி புலிகளின் ஆதரவாளர்களின் அரசியலை விமர்சித்த வண்ணம், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான பல வழிகளை முன்வைக்கின்றனர். அவற்றுள் வீரியமான வழிகளாக இரு கருத்துகள் - வழிமுறைகள் விவாதிக்கப்பட்டு வருகிறது.

1.சோசலிச தமிழ் ஈழத்தை ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டங்கள் மூலம் வெல்வது

2.இன்று நடைமுறையில் செய்யக் கூடியதாகக் கருதப்படும் - ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களுடன் இணைந்து, இலங்கை அரச ஒடுக்குமுறைக்கு எதிராக மற்றும் பொருளாதார சமத்துவத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் தமிழ் தேசிய அபிலாசையை நிறைவேற்றுதல்.

மேற்படி இருதுருவக் கருத்துக்களுக்கும், வேலைத்திட்டங்களுக்குமிடையில் பலநூறு வகையான திட்டங்களும், கருத்துக்களும் அவரவர்களின் அரசியல் இருப்புக்கேற்ப முன்வைக்கப்படுகின்றன. உதாரணமாக, இன்று அரசுடன் இயங்கும் முன்னாள் இயக்கங்களைப் பழையபடி தூசிதட்டி இயங்க வைத்தல் மற்றும் இந்தியாவின் உதவியுடன் மறுபடியும் ஆயுத இயக்கங்களைக் கட்டி இலங்கையில் இறக்குதல் போன்றவற்றைக் கூறலாம். பெரும்பாலும் இத்திட்டங்களும், கருத்துக்களும் எந்தவித நடைமுறையும் இல்லாத வெறும் கதையாடல்களே. எந்தவிதத்திலும் கருத்தை முன்வைக்கும் பெரும்பான்மையானோரால், தாம் சொல்லும் அரசியல் தேர்வுகளை, இலங்கையில் நடைமுறைப்படுத்தி விட முடியாது.

உதாரணமாக ”சோசலிச தமிழ் ஈழத்தை ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டங்கள் மூலம் வெல்வது” என்ற தமிழ்த் தேசிய விடுதலைக்கான வழிமுறையை ஆராயவோமெனில்,

இன்றுள்ள உலகார்ந்த இராணுவ மற்றும் பொருளாதார சூழலில், எந்தவிதமான ஏகாதிபத்தியத்தையும் சாராமல் எவ்வாறு, மறுபடியும் ஒரு ஆயுதம் தாங்கிய தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை உருவாக்க முடியும்? அல்லது புலிகளுடன் சேர்ந்து இயங்கி, 2009ற்கு பின்னர், இன்றைய இலங்கை அரசுடன் சேர்ந்து இயங்கும் முன்னாள் இயக்கங்களை எப்படி நடைமுறையில் மக்கள் சார்ந்து இயங்கும் தமிழ் தேசிய விடுதலை இயக்கமாக உருவாக்க முடியும்? மிஞ்சிமிஞ்சிப் போனால் சில பத்துப்பேரைக் கொண்ட பயங்கரவாதத்தை முன்னெடுக்கும் சிறு ஆயுதக் குழுவையோ அல்லது பெயர்பலகைக் கட்சியையோ மட்டும்தான் உருவாக்க முடியும். ஆனால் இன்றைய ஒடுக்கப்படும் அனைத்து மக்களின் தேவையான, இலங்கையின் ஆதிக்க அரசக்கட்டுமானத்தை அசைத்து வீழ்த்தும் வலுக்கொண்ட ஒரு மக்கள் ஸ்தாபனத்தை உருவாக்க முடியாது.

இதனடிப்படையில் ஒடுக்கப்படும் அனைத்து இன மக்களையும் சார்ந்து - குறிப்பாக சிங்கள மக்களின் பொருளாதார சமவுரிமைக்கான போராட்டத்தைச் சார்ந்து - தமிழ் தேசிய அபிலாசையை பூர்த்தி செய்வதற்காக போராடுவதே இன்று எம்முன்னுள்ள ஒரே ஒரு இடதுசாரியம் சார்ந்த - நடைமுறையில் இதுவரை பரீட்சிக்கப்படாத, சாதகமான திட்டமாக உள்ளது. இக்கருத்தைத் - திட்டத்தை எமது முன்னிலை சோசலிசக் கட்சி உட்பட்ட இலங்கையின் உழைக்கும் வர்க்கம் சார்ந்த அமைப்புகள், சமவுரிமை இயக்கம் ஊடாக சில வருடங்களுக்கு முன் முன்வைத்தபோது ஆரம்பத்தில் எதிர்த்தாலும், தற்போதுள்ள அரசியல் சூழல் சார்ந்து கொள்கை அளவில் இன்று பல குழுக்களும், சமூகநலன் சார்ந்து சிந்திக்கும் தனிமனிதர்களும் தற்போது பரவலாக ஏற்றுக்கொள்கின்றனர்.

இதனடிப்படையில் சமவுரிமை இயக்க வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இடது சக்திகளை அமைப்பாக்குவது பற்றி இன்றுவரை பல நூறு கலந்துரையாடல்களும், கூட்டங்களும், கருத்தரங்குகளும் புலம்பெயர் நாடுகளில் நடத்தப்பட்டுள்ளன. இன்றும் நடந்து வருகின்றன. ஆனாலும் இன்றுவரை பெரிய அளவில் இவ் முன்னெடுப்புகள் எதுவும், எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தி விடவில்லை.

மேற்கூறியபடி இன்று ஒடுக்கப்படும் அனைத்து இன மக்களுக்கிடையிலான இனவாதப்போக்கைத் தணித்து, அவர்களை ஒருங்கிணைக்கும் போராட்டத்தை முன்னெடுக்க - நடைமுறையில் இயங்க இடது சக்திகளாகத் தம்மை அடையாளப்படுத்துவோரை அழைத்தால், அவர்களிடமிருந்து வரும் பதில் ”நல்ல அரசியல் வேலைதான், மிக முக்கியமான வேலைதான். ஆனால்...!” என இழுப்பார்கள். பின்பு மிக கடுமையாகச் சிந்தனை செய்பவர்கள் போல பாவ்லா காட்டியபடி சுயநிர்ணயம் பெரிய பிரச்சனையாக உள்ளது என்பார்கள். இனவாதத்துக்கு எதிராகப் போராட முன் எல்லோரும் தமிழ் மக்களின் பிரிந்து போகும் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டும். அதன் பின்பே யாருடனாவது இணைந்து செயற்பட முடியுமென்பார்கள். இது மட்டுமல்லாமல் சுயநிர்ணயத்தை முன்வைக்காதவர்கள், கட்சிகள், முன்னணிகள் எல்லாமே இனவாதிகள் என்பது போல தமது ”அரசியற் தர்க்கத்தை” - அதுவும் மார்க்சிஸ - லெனினிய கோட்பாடுகளை உச்சாடனம் செய்தபடி முன்வைப்பார்கள். ஆனால், சுயநிர்ணய உரிமையை தமது




14 ஆம் பக்கம் பார்க்க...



"பூப்பூவாய் பூத்திருக்கு பூமியிலே ஆயிரம் பூ
கல்லுண்டாயில் பூத்திருக்கும் பூ அது என்ன பூ
அப்பாவும் அம்மாவும் உப்பு என்று சொல்லுவினை அது இப்போ தப்பு.
வண்ணத்துப் பூச்சி போல வானமெங்கும் பறக்குதிங்க பொலித்தீன் பூ"

அந்த நாளில இருந்த டிங்கிரி சிவகுரு இன்று இருந்திருந்தால் இப்படித்தான் பாடியிருப்பினம்.

உப்பளம் என்று சொன்னால் உடனேயே நினைவுக்கு வருவது வடக்கைப் பொறுத்தவரை கல்லுண்டாயும் ஆனையிறவும் தான்.

கல்லுண்டாய் வெளி காக்கைதீவுக்கும் அராலிக்கும் இடையில் உள்ள தாழ்வான கடல்நீர் உட்புகும் குடிமனைகள் இல்லாத பெரும்வெளி. ஒருபுறம் குடாக்கடலும் மறுபுறம் வயல்வெளியையும் கொண்டது.

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பார்கள். இந்த உவர் மண்ணோ, உப்பில்லை என்றால் குப்பையிலே வீசுகின்ற உணவை சுவையூட்டி உன் கோப்பையிலே இட்டு உன் பசி தீர்த்தது.

# பொலித்தீன் பூக்கள்

ஆனால் உப்பில்லா உணவைக் குப்பைக்கு சேராமல் தடுத்த கல்லுண்டாய் வெளி இப்போது அதன் உப்பைத்தின்று வளர்ந்த நன்றியில்லாத எங்களால் குப்பையால் குளிப்பாட்டப்படுகின்றது. உப்புவிளைந்த பூமியில் இன்று விளைவது குப்பை.

"உப்புவிளைந்த பூமியிலே இன்று விளைவது குப்பையடா உண்ண தந்த அதன் வாயினிலே நீ தின்னத் திணிப்பது நாசக் குப்பையடா!"

இங்கு கொண்டுவந்து குவிக்கப்படும் குப்பைகளுக்குள் உரப்பை தொடக்கம் உளுத்துப் போகாமல் என்றும் சிலிர்த்தும் காற்றில் படபடத்தும் பறந்தும் அவ்வெளியெங்கும் வண்ண வண்ண நிறத்தில் வண்ணத்துப் பூச்சி போல சுதந்திரமாக பறந்து பரவும் பொலித்தீன் பூக்கள் அழியாச் சீவியம் நடாத்துகின்றன. ஆனால் "அன்றே கொல்வான் அரசன் நின்றே கொல்லும் தெய்வம்" என அழியப்போவது அயலில் உள்ள கால்நடைகளும், மீன்வகைகளும் வயற்பரப்பில் விளைகின்ற நெல்மணிகளும், தாவரங்களும், நீர்நிலைகளும் தான். அழியாவரம் பெற்ற அசுரனாகவோ அல்லது "தண்டிக்கும் தெய்வமாகவே" நின்று அழிக்கப்போவது பொலித்தீன் பூ.

நுகரும் பொருட்களை கடைகளிலிருந்து நிரப்பிக் காவுவதற்கு அன்றிருந்தது கடதாசிப்பை" உக்கி மீண்டும் மண்ணுக்கு வளம் தர உரமாகிவிடும். இன்றிருப்பது பொலித்தீன் பை.

அரிசி, மா, பருப்பு, உழுந்து தானியங்களை மூட்டையாக வாங்கினால் சணல் சாக்குப்பை அது ஒரு சாகும் குப்பை. இன்று உரப்பை (உரப்பை என்று பெயர் வரக் காரணம் முன்னர் தோட்டங்களுக்கான செயற்கை உரம் இந்த பைகளிலேயே வந்தது) ( பொலித்தீன் பை) - அது சாகாக் குப்பை.

குடிப்பதற்கு வாங்கும் குளிர்பானங்கள் நிரப்பப்பட்டு வருவது கண்ணாடிப் போத்தல்- இன்று பிளாஸ்டிக் போத்தல்.

சாப்பாட்டுப் பார்சல் வாழையிலையில் அல்லது வாழைத்தடலில் வரும். இப்போது வகைவகையான பொலித்தீன் பைகள்.

வீட்டு விசேஷங்களில் விருந்தினருக்கு மனம் மகிழ உணவு படைப்பது வாழையிலை, தாமரையிலை, பனையோலைத் தட்டுவம் மற்றும் கஞ்சியாய், கூழாய் அல்லது கள்ளாய் இருந்தால் பிளா, தேங்காய்ச் சிரட்டை என இயற்கை தந்த பாத்திரங்கள். பாவித்தபின் எறிந்து விடலாம். தோட்டங்களுக்கு பசளையாகி மீண்டும் உணவுச்சங்கிலியில் சேர்ந்து விடும். இன்றோ பிளாஸ்டிக் சாப்பாட்டுத் தட்டுகள். தட்டுக்களில் உணவு பரிமாறிய பின் அத்தட்டுக்களை நீரில் அலம்பி சுத்தம் செய்யும் வேலைச்சிரமத்தினை தவிர்ப்பதற்காக தட்டுக்களின் மேல் இடப்படும் பொலித்தீன் ரிசுக்கள்.

கச்சான், கடலை போன்ற நொறுக்குத் தீனிப் பொட்டலங்கள் பாவித்த பழைய பேப்பரில் சிறிய பையிலோ அல்லது சரை சுத்தியோ தரப்படும். இன்று அதற்கும் பொலித்தீன் பைகள்.

**"மணல்வீடுகட்டியும், மணற் சோறு கறி சமைத்தும் மற்றும் இன்னோரன்ன விளையாட்டுக்களில் கழிந்தது நமது குழந்தைப்பருவம். இன்று குழந்தையின் படுக்கை அறையிலோ அல்லது பாடசாலையிலோ விளையாட்டுப் பொருட்களாக நிரம்பிக் கிடப்பதில் பெரும்பாலானவை பிளாஸ்டிக்கினால் ஆனவைகளே."**

பனையோலைப் பாய், புற்பாய் என படுக்கைக்கு உபயோகமான இயற்கை தந்த பாய்கள் இன்று செயற்கையான பிளாஸ்டிக் பாய்களாக மாறிப் போய்விட்டன.

மணல்வீடுகட்டியும், மணற்சோறு கறி சமைத்தும் மற்றும் இன்னோரன்ன விளையாட்டுக்களில் கழிந்தது நமது குழந்தைப்பருவம். இன்று குழந்தையின் படுக்கை அறையிலோ அல்லது பாடசாலையிலோ விளையாட்டுப் பொருட்களாக நிரம்பிக் கிடப்பதில் பெரும்பாலானவை பிளாஸ்டிக்கினால் ஆனவைகளே.

எதைத் தொடுகிலும் பிளாஸ்டிக்கினால் தயாரான உபயோகப் பொருட்களைத் தொடாமல் ஒருநாளைக் கூட கடந்து போய் விட முடியாத அளவுக்கு பிளாஸ்டிக் உபயோகம் பல்கிப் பெருகி விட்டது.

வீட்டில் கூட்டியொதுக்கப்பட்டு சேமிக்கப்படும் குப்பைத்தொட்டிகளில் தோட்டப்பயிர்ச்செய்கைக்கான, நெற்பயிருக்கான இயற்கையான பசளை எவ்வித கலப்பும் இன்றி அன்றிருந்தது. இன்றோ இவ்வாறு பசளைக்கென கூட்டிச் சேர்க்கப்படும் குப்பைமேடுகளில் சிறு துண்டுகளாக, துகள்களாகக் கிழிந்துபோன அல்லது முழுதாகவே எறியப்பட்ட பொலித்தீன் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. முழுதான பெரிய பொலித்தீன்களை பொறுக்கி எடுக்க முடிந்தாலும் கூட சிறு துண்டுகளாக துகள்களாகிப் போன பொலித்தீன் பைகள் தோட்ட மற்றும் வயல் மண்ணுக்குள் குப்பையோடு குப்பையாக புதையுண்டு போகின்றன. உழவு இயந்திரத்தாலோ கலப்பையாலோ மண்ணைப் பிரட்டி உழுகின்றபோது அவை மேலும் சிதிலமடைந்து கண்ணுக்குப் புலப்படாதபடி ஆழ்மண்ணுக்குள் புதைந்து மறைந்து விடுகின்றன. இவற்றை துப்புரவு செய்வது இயலாததாகிவிடும்.

விவசாய நிலங்களையும், விவசாயத்துக்கு உதவும் நுண்ணுயிர்களையும், விவசாய ஈரலிப்பையும்(நீருறிஞ்சுதிறனையும்) பாதிப்படையச் செய்து சாகாவரம் பெற்ற பிளாஸ்டிக் இறுதியில் நிலக்கீழ் நீரூற்றுக்களையும் கிணற்றுநீர்த் தேக்கத்தினையும் பாதிப்படையச் செய்து நீரில் உவர்ப்பேற்றி குடிநீர்ப் பிரச்சனையை சுற்றுச் சூழலில் நிரந்தரமாக்கி விடும்.

கழிவுநீர் வாய்க்கால்களைச் சென்றடையும் பொலித்தீன்கள், கழிவுநீர் செல்லும் வழிகளை அடைத்து தேங்கி நிற்பதால் டெங்கு நோய் நுளம்புகள் உற்பத்தியாவதற்கு வழிவகுக்கின்றது. அதனால் டெங்கு நோய் அபாயம் அதிகரிக்கின்றது என யாழ் போதனா வைத்தியசாலை தனது அறிக்கையொன்றில் தெரிவிக்கின்றது.


கடலடியைச் சென்று சேரும் பொலித்தீன்களால் கடற்சூழல் மாசுபடுத்தப்படுகிறது. கடலடியில் உற்பத்தியாகும் மீன்களும், நண்டு, இறால் போன்றவையும் மீன்களுக்கு உணவாகும் கடலடித் தாவரங்களும் பாதிப்படைகின்றன. மீண்டும் மனிதனை அது கடலுணவு வழியில் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

கல்லுண்டாய் வெளி மட்டுமல்ல அங்குமிங்குமாகக் கொட்டப்படும் குப்பைகளிலிருந்து காற்றில் மிதந்து பறந்து வயல்களையும் சுற்றுச்சூழல்களையும் ஆக்கிரமித்திருக்கும் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் கழிவுகள் முழுவதும் பரவிக்கிடக்க அதனையிட்டு அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் பற்றி யாரும் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் பொலித்தீன் பைகளின் பாவனை அதிகரித்த வண்ணமேயுள்ளது. பொலித்தீன்கள் சரசரத்துப் பறக்கும் குப்பை மேடுகள் அதிகரித்த வண்ணமேயுள்ளது. பொலித்தீன்களை தனியாக சேமித்து கையாளும் பழக்கம் மக்களிடத்தில் இல்லை. எல்லாக் குப்பைகளும் போலவே பொலித்தீனும் பாவிக்கப்பட்ட பின் அதுவும் ஒரு குப்பை என்ற எண்ணத்தில் அவை எங்கென்றில்லாமல் வீசியெறியப்படுகின்றன.

இந்தப் பொலித்தீனின் புழக்கம் ஏன் அதிகரித்தது என்றால் அது நவதாராளமய உலகமயமாதல் சந்தையின் விளைவு. இது ஒரு உலகளாவிய சூழலியல் பிரச்சனை. கண்ணாடிப் போத்தலில் அடைத்து வந்த கொக்கோ கோலா குடிபானத்தைத் தூர இடங்களுக்கு குறைந்த செலவில் எடுத்துச்செல்வதற்காக பலமடங்கு நிறை குறைந்த பிளாஸ்டிக் போத்தலுக்குள் அடைத்து கொக்கோ கோலா பிரியர்களுக்கு வழங்கும் கொக்கோகோலா கம்பனியின் நடைமுறையே பொலித்தீன் பாவனையை வேகத்துடன் முதலில் அறிமுகம் செய்து வைத்தது. மற்றைய உற்பத்தியாளர்களும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கு தாவினார்கள். நுகர்வோர் கைகளில் வந்து சேர்ந்து சூழலியல் பிரச்சனையாக மாறியிருக்கும் பிளாஸ்டிக் பற்றி கவலைப்பட உற்பத்தியாளர்களுக்கு நேரமில்லை. நவதாராள உலகமயமாதல் சந்தைக்கு சூழலியல் பற்றி அக்கறையுமில்லை.

மாடுகளின் வயிற்றைக் கீறினால் கிடைக்கின்றதாம் பொலித்தீன் பைகள். மனிதர்களைக் கீறினால் பொலித்தீன் கிடைத்தால் கூட ஆச்சரியப்படத் தேவையில்லை.












# வசந்தத்தை தேடுகிறோம்



**சமவுரிமை இயக்கத்தின் தமிழ், முஸ்லிம், சிங்கள உறுப்பினர்கள் கூட்டாக பாரிஸ் நகரில் நடாத்திய மாபெரும் கலைவிழா காட்சிகள்!**

இலங்கையில் முஸ்லீம் மக்களுக்கு எதிரான பேரினவாத வன்முறையை எதிர்த்து கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக சமவுரிமை இயக்கம் நடத்திய போராட்டம் போன்று, பாரிஸ் கலைவிழா புதிய காலடியை எடுத்து வைத்திருக்கின்றது. இனவாத வரலாற்றை மாற்றி அமைக்கக் கூடிய நிகழ்வுகளாக, இனவாதத்தை எதிர்த்து இவை முன்னெடுக்கப்பட்டதே இதன் சிறப்பாகும். இனவாதமே எல்லாம் என்ற பொதுவான அரசியல் உளவியலுக்கு முரணாக, அரசுக்கு எதிராக இனம்-மதம்-சாதி கடந்தும் போராட முடியும் என்பதையும் இந்த விழா பறைசாற்றியுள்ளது. இந்தக் கலைவிழாவானது தனக்குள் சொந்த விமர்சனங்கனைக் கொண்டு இருந்த போதும், அதைக் கடந்து சமூகங்களையும் மக்களையும் ஒன்றிணைக்கும் அதன் நோக்கில் தனது முதல் காலடியை எடுத்து வைத்திருக்கின்றது.

இந்த வகையில் சமவுரிமையை முன்னிறுத்தி, கலைக்கான முதல் நிகழ்வாக பாரிஸ் கலைவிழா அமைந்தது. சமவுரிமை இயக்கம் தன் பேசுபொருளில் கலைகளை முன்வைத்து இயங்கக் கூடிய, கலைஞர்களற்ற ஒரு பொது சமூகவெளியில் இந்த நிகழ்வு மூலம் காலடியை எடுத்து வைத்திருக்கின்றது.

அதேநேரம் இந்த நிகழ்வு குறித்த விமர்சனம், சுயவிமர்சனம் என்பது, எதார்த்தத்தைக் கடந்ததாக அமைவது இதன் நோக்கத்தை சிதைத்துவிடும். இதை கலை மற்றும் கலைஞர்கள் குறித்த விமர்சனத்தின் போது கருத்தில் கொள்ள வேண்டும். அறிவியல்வாதி கலைஞனை எதிரியாக மாற்றிவிடக் கூடாது. அதாவது இங்கு அறிவியல்வாதி (புறநிலை யதார்த்தத்தின் வெளிப்புற உலக நிகழ்வுகளை ஆராய்கின்றான்) - கலைஞன் (அகநிலைப்பட்ட யதார்த்தத்தின் உட்புறத்தை ஆராய்கின்றான்). இந்த இரு வேறுபட்ட சமூக செயற்பாட்டு அடிப்படையில் உள்ள முரண்பாடு, அதனாலான வேறுபாட்டையும் ஒன்றுக்கு எதிரான மற்றொன்றின் மீதான விமர்சனமாக்குவது தவறானது. சமவுரிமை இயக்கத்தின் நோக்கத்துக்கும் இதன் செயற்பாட்டுக்கும் கூட இது முரணானது.

மறுபக்கத்தில் சமவுரிமை இயக்கத்தின் எதார்த்தம் வெளிப்படையானது. சமவுரிமை இயக்கத்தின் அரசியல் உள்ளடக்கத்தை அரசியல்ரீதியாக முன்வைத்து இரண்டு வருடங்களாகின்றது. இந்த அரசியல் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொண்டு இயங்குவதற்கு தடையாக, இனவாதமே தொடர்ந்து காணப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக சமவுரிமை இயக்கம் தன்னை ஒரு வெகுஜன இயக்கமாக மாற்றிவிட போராடும் ஒரு நிலையில், இப்பொருளில் கலைசார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது என்பதே உண்மை. இந்த எதார்த்தம் சார்ந்த அதன் சொந்தக் குறைபாடுகளில் இருந்தே, விமர்சனங்களை உள்வாங்க வேண்டியதாக உள்ளது.



> **“இந்த விழா பற்றிய விமர்சனங்கள் எதிர்காலத்தில் சமவுரிமை இயக்கத்தின் நடைமுறை ஊடாக களைய வேண்டிய பணியாகவே கருதுகின்றது.”**

அதேநேரம் சமவுரிமை இயக்கம் இனம்-மதம்-சாதி கடந்து சமவுரிமையை முன்வைத்து அதற்காக உழைக்கக் கூடிய அனைவரையும் தனக்குள் உள்வாங்கிக் கொண்டதன் மூலமே, பாரிஸ் கலைவிழாவை அனைவருக்கும் முன்மாதிரியாக மாற்றி இருக்கின்றது.

இன-மதம்-சாதி கடந்த சமூக செயற்பாட்டாளர்களின் ஒருங்கிணைப்பை உருவாக்கிய பின்புலத்தில், சமவுரிமை இயக்கத்தைச் சுற்றி புதிய ஐக்கியத்தை உருவாக்கி இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள், மாறுபட்ட கருத்துகள் கொண்ட தனிநபர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பயணித்ததின் விளைவே இந்தக் கலைவிழா.

பிரான்ஸ் சமவுரிமை இயக்கம் தனிநபர்கள், குழுக்கள் கொண்டிருக்கக் கூடிய கருத்துகள், செயற்பாடுகளை விமர்சனம் செய்வதை கடந்து, புதிய சமூக இயக்க நடைமுறைகள் மூலம் அவற்றை கடக்குமாறு வழிகாட்டி இருக்கின்றது.

இந்த வகையில் ஒவ்வொரு மனிதனும் தான் கொண்டிருக்கக் கூடிய அரசியல் நிலையில் இருந்து இந்த நிகழ்வை
















**“இந்த வகையில் சமவுரிமையை முன்னிறுத்திய, கலைக்கான முதல் நிகழ்வாக பாரிஸ் கலைவிழா அமைந்தது. சமவுரிமை இயக்கம் தன் பேசுபொருளில் கலைகளை முன்வைத்து இயங்கக் கூடிய, கலைஞர்களற்ற ஒரு பொது சமூகவெளியில் இந்த நிகழ்வு மூலம் காலடியை எடுத்து வைத்திருக்கின்றது.”**




விமர்சனம் செய்வற்கு பதில், இனம்-மதம்-சாதி கடந்த சமவுரிமை இயக்கத்தின் நோக்கத்துடன் ஒன்றி நின்று இதை அணுகுவதையே கோருகின்றது. இதன் மூலம் அனைவருடைய சுயவிமர்சனமாக, விமர்சனத்தை மாற்றி அமைக்க சமவுரிமை இயக்கம் விரும்புகின்றது. இன்றைய இனவாத சூழலுக்கு அனைவரையும் பொறுப்புடையவராக்கி அதை மாற்றி அமைக்க முன்வருமாறு அழைக்கின்றது. இந்த வகையில்

1. அனைவரையும் தாங்கள் கொண்டிருக்கக்கூடிய சொந்த கருத்துக்களையும் செயற்பாட்டையும் கடந்து, இனம் மதம் சாதி கடந்த மனிதனை மனிதன் நேசிக்கும் ஒரு புதிய புள்ளியில் இணைந்து கொள்ளுமாறு விட்டுவிடுகின்றது.
2. வெறும் கருத்துகளைக் கொண்டிருப்பதைக் கடந்து, நடைமுறை இயக்கத்தில் இணைந்து பயணிக்குமாறு, அனைவருக்குமான புதியதொரு நடைமுறையை முன்வைத்து இயங்குமாறு கோருகின்றது.
3. மேற் கூறிய இரண்டையும் மக்களைச் சார்ந்து செயற்படுவதன் மூலம், புதிய அரசியல் கற்கையையும், நடைமுறையையும் உருவாக்கிக் கொள்ளுமாறு வேண்டுகின்றது. கடந்த மற்றும் நிகழ்காலத்தின் தவறுகளை, மக்களுடன் சேர்ந்து பயணிப்பதன் மூலம் தங்கள் அரசியல் நடத்தைகள் மூலம் மாற்றிக் கொள்ளுமாறு விட்டு வைக்கின்றது.

கடந்தகாலம் பற்றிய விமர்சனங்களுக்கு சுயவிமர்சனத்துக்கு பதில் மக்களுடன் இணைந்த செயல்பூர்வமான நடத்தையே, அடிப்படையில் விமர்சனமும், சுயவிமர்சனமுமாகும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுமாறு தூண்டுகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு எந்த தனிநபர்களையும், குழுக்களையும் விமர்சனம் செய்வதோ, அவர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளை சமவுரிமை இயக்கத்துக்குள் கொண்டு வருவதையோ சமவுரிமை இயக்கம் அனுமதிப்பதில்லை.

இந்தச் சரியான அணுகுமுறை பிரான்ஸ் சமவுரிமை இயக்கத்தை தங்களுடைய சொந்த இயக்கமாக கருதி இயங்கும் பொது அரசியல் உள்ளடக்கத்தை அதற்கு வழங்கியது. இந்த விழா அப்படித்தான் வெற்றி பெற்றது. பலருக்கு இன்னும் இதனுடன் இணைந்து பயணிக்க தயக்கங்கள் இருந்த போதும், அதைக் களையும் திசையில் தனது பயணத்தை இந்த விழா தொடங்கி வைத்துள்ளது.

இந்தப் பின்புலத்தில் தான் கலைகளும், கலைஞர்களும் கூட உள்வாங்கப்பட்டனர். இரு மொழி சார்ந்த கலைஞர்களின வேறுபட்ட வளர்ச்சியும் அதற்கான சூழலும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வகையில்

1.சிங்கள மொழி பேசும் கலைஞர்கள் கலைசார்ந்த மக்கள் கலைப்படைப்புகளை பாரம்பரியமாக கொண்டிருப்பதையும்

2.தமிழ் மொழிக் கலைஞர்களிடம் பாரம்பரியமான மக்கள் கலைத் தன்மையற்ற நிலைமை இருப்பதையும்

இதனால் கலைப் படைப்பில் சமச்சீரற்ற தன்மையை உருவாக்குவதுடன், அது விமர்சனத்தை உருவாக்கும் என்ற உண்மையை இந்த விழா தனக்குள் கொண்டிருந்தது.

அதேநேரம் கலைகளாக எம்முன் இருப்பவை, பழைய பண்பாட்டு மரபுகள் சார்ந்தவை. கலைப் படைப்புகளாக அவை வெளிவரும் போது, அது கொண்டிருக்கக் கூடிய நிலப்பிரத்துவ கூறுகளை அடிப்படையாகக் கொண்ட விமர்சனங்களையும் இந்த விழா நிராகரித்துவிடவில்லை.

இன-மத-சாதியத்தை எதிர்த்து சமவுரிமையின் கொள்கைக்கும், பழைய நிலப்பிரபுத்துவ மரபு சார்ந்த மொழி சாதிய மதப் பெருமையை பேசும் படைப்புகளுக்கும் உள்ள முரண்பாட்டை இந்த விழா தன்னளவில் நிராகரிக்கவில்லை.

இந்தக் கலைப் பயணம் என்பது இனவாதம், மதவாதம், சாதியவாதம் கொண்ட சமூக அமைப்பில் இருந்து, முறித்துக் கொண்ட அல்லது முரண்பட்டுக் கொண்ட அல்லது கலையை முன்னிறுத்திக் கொண்ட கலைஞர்களின் சொந்தப் போராட்டத்துடன் மேடையேறியது. இதனால் கலை சார்ந்த அதன் குறைபாடுகள், எமக்கு இடையிலான முரண்பாடானவையல்ல. ஒரு கலைஞன் உள்ளுணர்வற்றதும், அவனுடையதல்லாத கருத்துக்காக அதை விமர்சனம் செய்வது சமவுரிமையின் நோக்கமல்ல.

இந்த விழா பற்றிய விமர்சனங்கள் எதிர்காலத்தில் சமவுரிமை இயக்கத்தின் நடைமுறை ஊடாக களைய வேண்டிய பணியாகவே கருதுகின்றது.

சமவுரிமை இயக்கத்தின் அரசியல் இயக்கமும் சரி, கலை முயற்சியும் தனக்கான ஆரம்பப் புள்ளியையே இட்டிருக்கின்றது. அதன் குறைபாடுகள் அனைத்தும் தன்னை வளர்த்துக் கொள்வதற்கான ஒன்றாக சமவுரிமை இயக்கம் நடைமுறையை மாற்றி அமைக்கின்றது. இந்த வகையில் சமவுரிமை இயக்க செயற்பாடுகள் மீதான விமர்சனங்கள் என்பது, எங்களுடைய சொந்த சுய விமர்சனமாக மாற்றிக் கொண்டு நடைமுறையில் பயணிப்பதையே கோரி நிற்கின்றது.

**“மறுபக்கத்தில் சமவுரிமை இயக்கத்தின் எதார்த்தம் வெளிப்படையானது. சமவுரிமை இயக்கத்தின் அரசியல் உள்ளடக்கத்தை அரசியல்ரீதியாக முன்வைத்து இரண்டு வருடங்களாகின்றது. இந்த அரசியல் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொண்டு இயங்குவதற்கு தடையாக, இனவாதமே தொடர்ந்து காணப்படுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக சமவுரிமை இயக்கம் தன்னை ஒரு வெகுஜன இயக்கமாக மாற்றிவிட போராடும் ஒரு நிலையே, இப்பொருளில் கலைசார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது என்பதே உண்மை. இந்த எதார்த்தம் சார்ந்த அதன் சொந்தக் குறைபாடுகளில் இருந்தே, விமர்சனங்களை உள்வாங்க வேண்டியதாக உள்ளது.”**

# இந்த பாராளுமன்றத்துக்கு இறைமை இருக்கிறதா?

## வரவு - செலவு திட்ட விவாதத்தில் அஜித்குமார பா.உ கொஸ்லந்த மீரியாபத்த பகுதியில் இடம் பெற்ற மண்சரிவு அனர்த்தம் தொடர்பில் முன்வைத்த கருத்துக்கள்

கௌரவ உப சபாநாயகர் அவர்களே உங்களையும் சபாநாயகரையும் கௌரவ என்ற சொற்பதத்தை பயன்படுத்தி அழைக்கின்றோம். அதே போல் இந்தச் சபையையும் கௌரவ சபை என்றே குறிப்பிடுகின்றோம். இவ்வாறு கூறுவது அரசியல் அமைப்பிற்கு அமைவாகவே ஆகும் இந் நாட்டு மக்களின் இறைமை இந்த பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில்தான் இந்த சபையை கௌரவ சபை என அழைக்கின்றோம். கௌரவ சபை என அழைக்கப்படும் இந்தச் சபைக்கு இறைமை இருக்கிறதா? அந்த அளவுக்கு பெறுமதி வாய்ந்ததா இந்தச் சபை? சாதாரணமாக பார்க்கும் போது அவ்வாறு இல்லை என்றே தெரிகின்றது. அநேக நாட்களில் கோரமின்மையால் இந்த சபையை கூட்ட முடியாமல் போயுள்ளது. ஆளும் கட்சி எதிர்க்கட்சிகள் எல்லோருமாக இணைந்து கோரம் இல்லாவிட்டாலும் சபையைக் கூட்டலாம் என்ற யோசனையை முன் வைத்தார்கள். இந்த வகையில் உண்மையான மக்களின் இறைமை இல்லை என்பது தெளிவாகிறது.

வெளிப்பார்வைக்கேனும் மக்களின் இறைமை இந்தச் சபைக்கு இருப்பதாகத் தெரியவில்லை என்பதற்கான அன்மைக்கால சிறந்த உதாரணம்தான் மீரியாபத்த அகதிகள் விவகாரம் ஆகும். நான் இது தொடர்பில் மிகவும் கவலை அடைந்தேன். நான் எனது கவலையை வெறுமனே சோகத்துடன் மட்டுப்படுத்தாது அதற்கான காரணியையும் முன் வைக்க விளைகின்றேன். கட்டிட ஆராய்ச்சி திணைக்கள மண்சரிவு அனர்த்தப்பிரிவின் தலைவர் உட்பட ஏனைய அதிகாரிகளும் 2005 இலும் 2011 இலும் மக்களை இப்பிரதேசத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என தெரிவித்திருந்தனர். அம்மக்களுக்கு மாற்று இடம் வழங்கப்பட்டதாக கூறும் பிரதேச செயலாளர் இந்த இடத்தை விட்டு வெளியேறும்படி அறிவுறுத்தியதாகவும் மாற்று இடம் வழங்கி அவ்விடத்திற்கு குடிபெயரும்படியும் தெரிவித்ததாகக் கூறும் பிரதேச செயலாளர் 30 குடும்பங்கள் வரை அங்கிருந்து வெளியேறி புதிதாக வழங்கப்பட்ட இடத்தில் குடியேறியுள்ளதாகவும் தெரிவிக்கின்றார். அவ்வாறாயின் தவறு யாருடையது. மக்களுடையதா? நான் கேட்கிறேன் இந்த அனர்த்தத்திற்கு இரையான மக்களுக்கு, இறைமை இருப்பதாகக் கூறப்படும் அதி உயர் சபையான இந்த பாராளுமன்றமும் ஆட்சியாளர்களும் பதில் சொல்வார்களா? மக்களுக்கு மாற்று இடம் ஒன்றை காண்பித்தால் மட்டும் போதுமா? அவர்களால் அங்கு சென்று குடியமர முடியுமா?

நாளொன்றுக்கு 485ரூபா சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்களால் அங்கு குடியேற முடியுமா? 30 நாட்களும் வேலை செய்தால் கிடைக்கும் சம்பளம் 14,550 ரூபா மட்டுமே ஆகும். மழை பெய்தால் வேலை இல்லை. வேலை இல்லை என்றால் அன்றைய தினத்திற்கு சம்பளமும் இல்லை. அந்த மக்கள் அதிகமாக உண்பது ரொட்டி ஆகும். அதுவும் தேங்காய் சேர்க்காமல். அந்தளவிற்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அவர்களை மாற்று இடங்களில் குடியமரும்படி கூறினால் வீடொன்றை நிர்மாணிக்க 2 தகரங்களைக் கூட வாங்கமுடியாத அவர்களுக்கு இது சாத்தியப்படுமா? பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமலும் கேள்விப்பத்திரம் கோரப்படாமலும் "சங்கிலால்" கம்பனிக்கு பாதுகாப்பு அமைச்சின் பெறுமதி வாய்ந்த நிலம் கொழும்பில் வழங்கப்பட்டது. மக்களின் அனுமதியுடன்தான் இது நடந்ததா? கோடீஸ்வர முதலாளிகளுக்கும் கொழுத்த பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் தேநீர் விருந்தளித்து இடம் வழங்கப்படுகிறது. அவர்களை உலங்கு வானூர்தியில் அழைத்துச் சென்று இந்த இடம் நல்லதா அந்த இடம் நல்லதா எனக் கேட்டு இடம் வழங்கப்படுகிறது. அதேவேளை தேங்காய் சேர்த்து ரொட்டி தயாரிக்க வசதி அற்ற 450 ரூபா நாட் சம்பளம் பெறும் ஏழை எளிய உழைக்கும் மக்களுக்கு சொல்கிறார்கள்- அந்த இடத்தில் சென்று வீட்டை அமைத்து குடியமருங்கள் என்று சொல்கிறார்கள். எனவே இந்தப் பாராளுமன்றம் அதி உயர்ந்ததா? இந்தப் பாராளுமன்றத்திற்கு பொதுமக்கள் வழங்கியுள்ள பலத்தை மக்கள் தேவைக்காக பயன்படுத்த முடியுமா? நாளொன்றுக்கு 300, 400 ரூபா சம்பளம் பெறும் ஏழை எளிய மக்களை ஒருவிதமாகவும் மேல்மட்ட கோடீஸ்வர வர்த்தகர்களை ஒருவிதமாகவும் கதிரையை சூடாக்கிக் கொண்டிருக்கும் உயர் மட்டத்தினரை ஒருவிதமாகவும் கவனிக்கும் நடைமுறையே இந்த நாட்டில் காணப்படுகிறது. இது போன்ற எத்தனை சம்பவங்கள் இந்த நாட்டில் இடம் பெற்றுவிட்டது? 2014 யூலை 24ம் திகதி அமைச்சர் சரத் அமுனுகம இந்தச் சபைக்கு தெரிவித்ததன்படி தோட்டத்தொழிலாளர்களின் குடும்பம் ஒன்றிற்கு மாதாந்த வாழ்க்கைச் செலவிற்கு 29779 ரூபா தேவை என கூறினார். ஆனால் தோட்டத் தொழிலாளி ஒருவர் மாதம் 30 நாளும் வேலை செய்தால் பெறும் சம்பளம் 14,550 ரூபா மட்டுமே ஆகும். இந்த நிலையில் அவர்களால் சொந்தமாக வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொள்ள முடியுமா? என நான் கேட்கின்றேன்.

தோட்ட தொழிலாளர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் இந்த நாட்டு மக்கள். இந்நாட்டின் தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை சம்பாதித்துக் கொடுப்பவர்கள். தமது உதிரத்தை வேர்வையாகச் சிந்தி உழைக்கும் ஏழை எளிய மக்களாகும். 2013ம் ஆண்டு 20,000 கோடி ரூபாவை வெளிநாட்டு செலாவணியாக சம்பாதித்து கொடுத்தவர்கள். இந்த மக்கள் இயற்கை மரணம் எய்தும் முன்னரே அகால மரணத்திற்குள் சிக்காமல் காப்பாற்ற இந்த ஆட்சியாளர்களால் முடியாது. எனவேதான் நான் இந்தச் சபைக்கு இறைமை இல்லை என கூறுகிறேன். இது ராஜபக்ச அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, ரணில், சந்திரிக்கா, பிரேமதாச என அனைத்து ஆட்சியாளர்களுமே இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வில்லை என்பதை மறந்து விட முடியாது.

எமது பகுதிகளில் மரண ஆதார சங்கங்கள் உண்டு. அவை எதற்காக? மரணித்ததும் உதவி வழங்குவதற்காகவே



ஆகும். இந்த அரசாங்கங்கள் மரணித்தவர்களுக்கு மட்டுமன்றி மரணிப்பதற்கும் உதவி செய்கிறார்கள். இவர்களால் மக்கள் வாழ்வதற்கு உதவ முடியாது என்பதைத் தான் இந்த அனர்த்தங்களில் பலியானவர்கள் சொல்லும் செய்தியாகும். தற்போது வழங்கப்படும் உதவிகளும் மக்களிடம் இருந்து பெறப்பட்டதே தவிர கம்பனிக்காரர்களிடம் இருந்து பெறப்பட்டதல்ல. அதற்கான யோசனையைக் கூட கம்பனிகாரர்களுக்கு முன்வைக்க முடியாது. எனவே நான் தோட்டத் தொழிலாளர்களிடம் கேட்டுக் கொள்வது என்னவெனில், இதுவரை காலமும் பொறுத்ததும் சகித்ததும் போதும் இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக அணி திரளுங்கள் போராடுங்கள் என்பதே ஆகும். அதேபோல் ஏனைய பொதுமக்களும் சுற்றுச் சூழலுக்கு குந்தகமான வேலையைச் செய்பவர்களுக்கு எதிராக அணிதிரளுங்கள் என அறைகூவல் விடுக்கின்றேன்.

# மக்கள் மீண்டும் 56 ஹர்த்தால் பாதையில் முன்செல்வார்களா?

வருடந்தோறும் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை சுமார் 18 ஆயிரம் பேர் என கூறப்படுகிறது. பாடசாலைகளில் இருந்து இரண்டு லட்சம் என கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அனைவரும் அரச உத்தியோகத்தை எதிர்பார்த்து காத்திருப்பவர்களாகும். இவர்களில் பட்டதாரிகளுக்கு மட்டுமே அரச உத்தியோகம் கிடைக்கிறது. அதுவும் உடன் கிடைப்பதில்லை. பட்டதாரிகள் பல போராட்டங்களை நடாத்திய பின்னரே அரச உத்தியோகங்களை பெற்றுக்கொள்ள முடிகிறது. அனேகமானோர் ஆசிரியர்களாகவும், அரச அலுவலக உத்தியோகஸ்தர்களாகவும் நியமனம் பெறுகிறார்கள். எதிர்வரும் காலங்களில் பட்டதாரிகள் பியோன்களாகவும், சிற்றூழியர்களாகவும் நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. அந்தளவுக்கு இன்று அரசமட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது.

வருடாவருடம் பாடசாலைக் கல்வியை முடித்து வெளிவரும் இரண்டு இலட்சம் மாணவர்களின் வேலையில்லாப் பிரச்சினையை அரசு கண்டுகொள்வதேயில்லை. இவர்களில் சிலர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்று தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்கின்றனர். அனேகமானோர் தொழில்வாய்ப்பின்றியும், கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றனர். இவ்வாறாக தொழிலற்ற ஒரு பெரும் கூட்டமொன்று நாட்டில் இருப்பதைப் பற்றி ஜனாதிபதி முதற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் வரை எந்தக் கரிசனையும் இன்றி வெட்டித்தனமாக நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக்குவோம், நாட்டை பொருளாதாரரீதியில் ஆசியாவில் முதல்தரமானதாக மாற்றுவோம், நாட்டை சொர்க்கபுரியாக மாற்றுவோம் என மேடைக்கு மேடை முழக்கம் இடுகிறார்கள்.

ஆசிரியர்களாக அலுவலக உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெற்றவர்கள் பெறும் ஊதியம் அவர்களது செலவுகளுக்கு போதுமானதாக இல்லை. இதனால் அநேகமான பட்டதாரிகள் மனவழுத்தத்துடன் தமது வாழ்நாளை கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். இந்த நிலைமைக்கு மத்தியில்தான் ஜனாதிபதி முதற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை அடுத்த தேர்தலில் தமது வெற்றி தொடர்பில் இன்று கவலை கொண்டுள்ளனர். தமது வெற்றியை இலக்குவைத்தே வேலைத்திட்டங்களை திட்டமிடுகிறார்கள்.

பிரித்தானிய அரசு இலங்கையின் ஆட்சியதிகாரத்தை சிங்கள பிரபுத்துவ முதலாளிகளிடம் ஒப்படைத்துச் சென்றார்கள். ஆட்சியை பொறுப்பேற்ற முதலாளித்துவ தலைவர்கள் நாட்டிலுள்ள பிரபுக்களையும், முதலாளிகளையும் அவர்களது குடும்பங்களையும் பாதுகாக்க ஏற்புடையதாக சட்டதிட்டங்களை இயற்றி தாமும் தமது வர்க்க உறவுகளும் சீரும் சிறப்புமாக வாழ வகைசெய்தார்கள். இன்றுவரை ஆட்சியாளர் இதையே செய்துவருகின்றனர். அதேவேளை நாட்டுமக்கள் பரம்பரை பரம்பரையாக பஞ்சம், பசி, பட்டினி, வறுமையிலும் உழன்று கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்காகவே மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகள் மக்களை புரட்சிகரப் பாதையில் அணிதிரட்டி பெரும் போராட்டங்களை நடாத்தினர். 1947 மே, ஜுன் மாதங்களில் சம்பள உயர்வு, விலைவாசி உயர்வை தடுத்தல், தொழிலாளருக்கு அநீதி இழைப்பதை தடுக்கக் கோரியும் இதுபோன்று மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கையில் பொது வேலைநிறுத்தம் ஒன்று நடாத்தப்பட்டது. அவ்வேளையில் ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ் அரசு தனது ஆயுதப்படைகளை ஏவிவிட்டு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை கலைக்க முயன்றது. தொழிலாளர்கள் கலைந்து செல்ல மறுக்கவே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் நடாத்தப்பட்டது. துப்பாக்கி பிரயோகத்தில் தோழர் கந்தசாமி என்ற அரசாங்க உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டார். இதனால் தொழிலாளருக்கும் பொலிஸாருக்கும் இடையில் பெரும் கலவரம் வெடித்தது. இறுதியில் தொழிலாளர் போராட்டம் அடக்கப்பட்டது. சிலர் கைதுசெய்யப்பட்டனர் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

இதேபோல் 1953 இல் யூ.என்.பி ஆட்சியில் அரிசி விலை ஒருகொத்து 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான இலவச பணிஸ், பாண் விநியோகம் நிறுத்தப்பட்டமை, தபால் கட்டண உயர்வு, பேரூந்து மற்றும் புகையிரத கட்டண உயர்வு, ஆகிய அறிவித்தல்களால் கோபமடைந்த தொழிலாளர்களும், பொதுமக்களும் இன, மத பேதமின்றி ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் அணிதிரண்டு பொது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நாடுபூராவும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது, பேரூந்துகளும், புகையிரதங்களும் தமது சேவையை நிறுத்திக்கொண்டன. அனைத்து அரச காரியாலயங்களிலும் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். முழுநாடும் ஸ்தம்பிதம் அடைந்தது. யூ.என்.பி அரசு இந்த ஹர்த்தாலுக்கு எதிராக ஆயுதப்படையை ஏவியது. ஆர்ப்பாட்டங்களை தடைசெய்தது, உடனடியாக அவசரகால சட்டத்தைப் பிரகடனம் செய்தது. பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 12 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். பல தொழிலாளர்களை கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். அவசர அவசரமாக காலிமுக கடலில் தரித்துநின்ற கப்பலில் மந்திரிசபை கூட்டப்பட்டது. அவ்வளவு தூரம் தொழிலாளர் போராட்டத்துக்கு அரசு பயந்தது. வரவு-செலவு திட்டம் வாபஸ் பெறப்பட்டது. பிரதமர் டட்லி சேனாநாயக்கா பதவி விலகினார். சேர் ஜோன் கொத்தலாவல புதிய பிரதமரானார். சிலகாலம் இராணுவத்தர்பார் நடைபெற்றது. ஹர்த்தாலுக்கு அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக்கட்சியும், சில முற்போக்கு தொழிலாளர் தலைவர்களும் தலைமை கொடுத்தனர். போராட்டத்தை ஆரம்பிக்க தெரிந்த தலைவர்களுக்கு போராட்டத்தை வெற்றிகரமாக முடிக்க தெரிந்திருக்கவில்லை. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி ஆளவேண்டுமானால் தொழிலாளர் மத்தியில் புரட்சிகர செம்படை ஒன்றின் அவசியம் பற்றி கட்சித்தலைவர்கள் ஏற்கெனவே சிந்தித்திருக்கவில்லை. அதனால்தான் போராட்டம் தோல்வியைத் தழுவியது.



1956 இல் பொதுத் தேர்தலில் யூ.என்.பியும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் அதன் தோழமை கட்சிகளும் இணைந்து கூட்டாக போட்டியிட்டன. கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜ கட்சியும் சுதந்திரக்கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து தேர்தலில் போட்டியிட்டனர். இத்தேர்தலில் 1955 இல் யூ.என்.பியின் கழனி மாநாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பிரகடனம் செய்த தனிச்சிங்கள சட்டத்திற்குப் பதிலாக தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணித்தியாலத்தில் சிங்கள மொழியை அரசகரும மொழியாக பிரகடனம் செய்வேன் என்ற வாக்குறுதியை சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி சார்பாக பண்டாரநாயக்கா வழங்கினார். 1953 ஹர்த்தால் போராட்டத்தை கர்ண கொடூரமாக அடக்கிய யூ.என்.பி அரசு மீதான கோபாவேசமும்

> **“ புலிகளை தோற்கடித்த பெருந்தலைவர் என்ற பெயரை சூட்டிக் கொண்டும், படுபிற்போக்கான தொழிலாளவர்க்க விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளார். இன்று இவரது அமைச்சரவையில் அங்கம்வகிப்போரில் கணிசமானோர் பழைய யூ.என். பிகாரர்கள் என்பதை மக்கள் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். ”**

பண்டாரநாயக்காவின் அரசகரும மொழி வாக்குறுதியும் யூ.என்.பியை படுதோல்வியடையச் செய்து சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டை வெற்றியடையச் செய்தது.

1956 தேர்தல் முடிவு மக்களின் புரட்சிகர உணர்வுக்கு கிடைத்த வெற்றியாகும். இதனால் அமைந்த அரசாங்கமும் பல முற்போக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. பேரூந்து போக்குவரத்து சேவை, கொழும்பு துறைமுகம் ஆகியவை அரசுடமையாக்கப்பட்டது. விவசாய சீர்திருத்த சட்டமான நெற்காணி மசோதா நிறைவேற்றப்பட்டது, தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமை வழங்கப்பட்டது, ஊழியர் சேமலாப நிதி (ஈ.பி.எவ்) சட்டமாக்கப்பட்டது, கட்டுநாயக்கா மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் அமைந்திருந்த பிரிட்டிஷ் தளங்கள் வெளியேற்றப்பட்டன. இந்த நடவடிக்கைகள் தீவிரமான நிலையில் பிரதமர் பண்டாரநாயக்கா பிற்போக்குவாத சதிகாரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். பண்டாரநாயக்காவின் படுகொலையை அடுத்து பிரதமராக பதவியேற்ற பண்டரநாயக்காவின் மனைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம், தனியார் கட்டுப்பாட்டில் இருந்த பாடசாலைகளை அரசுடமையாக்கியது, இன்சூரன்ஸ் கம்பனிகள். அந்நிய பெற்றோலிய கம்பனிகள் என அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டன. இந்நடவடிக்கைகள் அனைத்தும் தொழிலாளர்களினதும், புரட்சிகர பொதுமக்களினதும் தொடர்ச்சியான போராட்டங்கள் அரசுக்கு கொடுத்த அழுத்தங்களின் பிரதிபலன்களே மேற்படி நிறுவனங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டமையாகும். 1970 இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரி கூட்டணி அரசாங்கம் 1972 இல் அந்நியர்களின் கைகளில் இருந்த தேயிலை. றப்பர் தோட்டங்கள் அனைத்தையும் அரச பெருந்தோட்டமயமாக்கம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, உசவசம போன்ற அரச கூட்டுதாபனங்களின் கீழ் கொண்டு வந்தது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தாபனங்கள் எல்லாம் அரசஉடமையாக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள், பொதுமக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்த மக்கள் சிறிது விடுபட்டார்கள்.

ஆனால் இன்று என்ன நடக்கிறது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டமைப்பு அரசாங்கம் திறந்த பொருளாதார கொள்கையை பின்பற்றுவதும், எமது நாட்டு நிலங்கள் மீண்டும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதும், வெளிநாட்டவர்கள் உல்லாச ஹோட்டல்கள் மற்றும் கஸினோ சூதாட்ட விடுதிகளை எமது நாட்டில் நிறுவுவதும், கொழும்பு, அம்பாந்தோட்டை துறைமுகங்களை அண்டிய பிரதேசங்களும் சீன அரசுக்கு விற்கப்படுவதும் என நடந்தேறுகின்றன. திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த பகுதிகளும் எண்ணை குதங்களும் 99 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இவற்றை அவதானித்த ஜப்பானும் தானும் இலங்கையில் முதலீடு செய்ய தயாராகிறது. இன்று அமெரிக்க பெற்றோல் கம்பனிகளான கல்ரெக்ஸ், செல்ரெக்ஸ் கம்பனிகள் மற்றும் இந்திய பெற்றோல் கம்பனிகளும் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளன. பேரூந்து சேவையில் தனியார்துறை அனுமதிக்கப்பட்டுள்ளது. கல்வித்துறையிலும் தனியார் பாடசாலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளது, வெளிநாட்டு இறக்குமதிகளால் அனத்து உள்நாட்டு உற்பத்திகளினதும் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் சிறு உற்பத்தி ஸ்தாபனங்களும் மூடப்படுகின்றன. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரிக்கிறது. கிராமங்களிலும் தற்கொலைகள் அதிகரித்துள்ளது. மக்கள் மத்தியில் வறுமை அதிகரித்து வருகிறது. நாட்டில் பரவலாக கொலை, கொள்ளைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.

1956 இல் இருந்து 1972 வரையிலான அரசாங்கங்கள் மேற்கொண்ட தேசியமய நடவடிக்கைகள் அனைத்தும் தற்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டமைப்பு அரசாங்கத்தினால் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கும் பல்தேசிய கம்பனிகளுக்கும் உள்நாட்டு பெருமுதலாளிகளுக்கும் பங்குபோட்டு விற்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது கடந்த காலங்களில் தொழிலாள வர்க்கமும் புரட்சிகர பொது மக்களும் பெற்ற வெற்றிகளை இந்த அரசாங்கம் தோற்கடித்து விட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னை பெரிய முற்போக்குவாதியாக காட்டிக்கொண்டும், புலிகளை தோற்கடித்த பெருந்தலைவர் என்ற பெயரை சூட்டிக் கொண்டும், படுபிற்போக்கான தொழிலாளவர்க்க விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளார். இன்று இவரது அமைச்சரவையில் அங்கம் வகிப்போரில் கணிசமானோர் பழைய யூ.என்.பி காரர்கள் என்பதை மக்கள் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். அன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரி கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களில் அநேகர் முற்போக்கானவர்கள். எனவே தான் தொழிலாளர்களும், பொதுமக்களும் நடாத்திய போராட்டங்களுக்கு மதிப்பளித்து தேசியமய நடவடிக்கைகளை அன்றைய அரசு மேற்கொண்டது. அதேவேளை இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் பிற்போக்குவாதிகளுக்கும், வெளிநாட்டு பிற்போக்கு அரசுகளுக்கும் எமது நாட்டை ஈடுவைத்து தம்மை

14 ஆம் பக்கம் பார்க்க...

# மோடி - சம்பந்தன் புதுடில்லியில் சந்திப்பு



அண்மையில் இந்திய மத்திய அரசின் பிரத்தியேக அழைப்பின் பேரில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் ஆறு பேரடங்கிய குழு, அதன் தலைவர் இரா சம்பந்தன் தலைமையில் புதுடெல்லி சென்று வந்துள்ளது. அங்கு இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திரமோடியையும் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜையும் மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்து விட்டு திரும்பும் வழியில், தமிழகம் சென்று பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர்களை சந்தித்து விட்டு கொழும்பு திரும்பினர். தமிழகத்தில் அப்போது முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயராம் ஜெயலலிதா சந்திக்க முயன்றதாகவும் அது சாத்தியப்படாமல் போனதாகவும் அறிய முடிகின்றது.

டெல்லி இல 7 ரேஸ்கோஸ் ரோட்டில் உள்ள இந்தியப் பிரதமர் வாசஸ்தலத்திற்கு சில நூறு யார் தூரத்தில் கூட்டமைப்பினர் சென்ற மூன்று வாகனங்கள் பாதுகாப்பு படையினரால் நிறுத்தப்பட்டு, வந்திருந்தவர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர் பாதுகாப்பு படையினரின் மூன்று வாகனங்களில் ஏற்றப்பட்டு பிரதமர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இங்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் ஏனைய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் தமிழில் "வணக்கம்" என கூறி கைகொடுத்து வரவேற்று அழைத்துச் சென்றார் பிரதமர் நரேந்திரமோடி.

> “இங்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் ஏனைய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் தமிழில் ‘வணக்கம்’ என கூறி கைகொடுத்து வரவேற்று அழைத்துச் சென்றார் பிரதமர் நரேந்திரமோடி.”

தனது மொழிபெயர்ப்பாளருக்கு ஊடாக இந்தியில் பேசிய பிரதமர் மோடி இரா.சம்பந்தனை நோக்கி "முதலில் நீங்கள் சொல்வதனை நான் கேட்க விரும்புகின்றேன்" என ஆரம்பித்தார். 30 நிமிடங்கள் மட்டுமே என தீர்மானித்திருந்த இச்சந்திப்பு ஒரு மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

சம்பந்தன் அவர்கள் வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற இராணுவமயமாக்கல் நிலப்பறிப்பு, குறிப்பாக வலிகாமப் பகுதியில் இராணுவத்தின் குடும்பங்களின் குடியேற்றங்களிற்காக 16000 ஏக்கர் நிலத்தினை அதிஉயர் பாதுகாப்புப் பிரதேசம் என்ற போர்வையில் அபகரித்துள்ளமை இப்படி பலவற்றினை மகிந்தாவின் கவனத்திற்கு தாம் எடுத்துச் சென்ற போதும் அரசு எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளாது உள்ளமை பற்றி எடுத்துக் கூறினார். மேலும் இந்தப் பிரதேசங்களில் இராணுவம் நெல், மரக்கறி, பழ பயிர்ச் செய்கையிலும், வடக்கில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார். மேலும் முல்லைத்தீவில் 5000 சிங்களவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் வடக்கு ஆளுநரான முன்னாள் இராணுவ அதிகாரியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

மேலும் வடக்கு ஆளுநர் மாகாணசபையின் செயற்பாடுகளிற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை பதவிவிலகும் வண்ணம் நெருக்கடிகளை கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

13வது திருத்த சட்டத்தினை, அதற்கும் மேலாக சென்று அமுல்படுத்துவதாக இலங்கை அரசு இந்தியாவிற்கு உறுதி அளித்ததனையும், கடந்த ஐந்து வருடங்களாக அதனை நடைமுறைப்படுத்தாது இழுத்தடிப்பதனையும் இந்திய பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இறுதியாக, இன்றைய ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக அடக்குமுறையினை எமது மக்கள் மீது ஏவிக்கொண்டு மேலதிக நிலங்களைப் பறித்து எமது மக்களின் சொத்துக்களை சூறையாடி சிறுவர் பெண்கள் மீது வன்முறைகளை ஏவி, எமக்கு ஒரு அரசியல் தீர்வினை தராமல் இந்த வருட இறுதிக்குள் இழுத்தடித்தக் கொண்டிருப்பார்களேயானால் தாம் மகாத்மா காந்தி பாணியில் அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தார். தமது சத்தியாக்கிரக போராட்டத்திற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தின் ஆதரவினை கேட்டுக் கொண்டார்.

சம்பந்தன் கூறியதனை, தனது இரு கைகளையும் நெஞ்சுக்கு குறுக்கே கட்டியபடி அமைதியாக கேட்டுக்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் "நாங்கள் நூறு வீதம் உங்களுடன்தான் இருக்கின்றோம்" என பதிலளித்தார்.

சம்பந்தன் அவர்கள் இதற்காக ஒரு விசேட தூதுக்குழுவினை அமைக்கும்படி கேட்டுக்கொண்ட போது, இந்தியப் பிரதமர் உடனடியாக அதற்கான தேவை இல்லை எனவும் கொழும்பு இந்திய தூதரகம் அதனை கவனித்துக் கொள்ளும் எனவும் பதிலளித்திருந்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 13வது சட்ட திருத்தத்தினை அதற்கும் மேலாக போய் அமுல்படுத்தவுள்ளதாக இந்திய அரசிற்கு உறுதிவழங்கியுள்ளதாக, சம்பந்தனுக்கு தெரிவித்ததுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு கோரிக்கை வைத்தார். இந்திய அரசு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவினை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த சந்திப்புக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் உடன் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. அதில் அவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை பிரதிநிதிப்படுத்தும் முஸ்லீம் மற்றும் மலையக கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி கேட்டிருந்தார். அதனை பிரதமர் நரேந்திரமோடி மீளவும் சம்பந்தனிடம் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் மகிந்த ராஜபக்ச, தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் 13வது திருத்த சட்டமூலத்தினை பொலீஸ் அதிகாரம் தவிர்த்து மாகாண சபைகளிற்கு அமுல்படுத்தவது குறித்து பேச எப்போதும் தயாராக உள்ளதாகவும், ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கின்றனர். பேச்சுவார்த்தைக்கு வராமல் நான் எப்படி அதிகாரப்பகிர்வு குறித்தோ அன்றி வேறு ஏதாவது பற்றி கதைக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் சர்வதேச மத்தியஸ்துவத்துடன் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து மகிந்த ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தயார் எனவும் இந்த பேச்சுவார்த்தை ஆறு மாதங்களிற்குள் நிறைவுபெற வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் விரைவில் வரவுள்ள சூழலில் இது சாத்தியப்படாததொன்று எனவும் மகிந்தா சர்வதேச மத்தியஸ்திற்கு ஒத்துக் கொள்வாரா எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நரேந்திரமோடி தலைமையிலான, பாரதிய ஜனதா புதிய மத்திய இந்திய அரசானது, தம்மை விசேடமாக டெல்லிக்கு அழைத்துப் பேசியது பெரும் திருப்புமுனை என தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது மேலும் இலங்கை தமிழர்களிற்கு இந்திய புதிய பாரதீய அரசால் நிச்சயம் விமோசனம் ஏற்படப்போகின்றது என குடுகுடுப்பைகாரனை போல தமிழ் மக்களை குழப்புகின்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.



மறுபுறத்தில் கொழும்பு சிங்கள ஆங்கில ஊடகங்களும் அரசியல் ஆய்வாளர்களும் இந்திய புதிய மத்திய அரசுக்கும், மகிந்தாவிற்கும் இடையில் முரண்பாடு உள்ளது போலவும் இந்திய அரசு தமிழ் மக்கள் பக்கம் நிற்பது போன்றதுமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. மேலும் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தின் போது மகிந்தா, மோடியை சந்திக்க அனுமதி கேட்டதாகவும், அதற்கு மோடியின் உதவியாளர்கள் உடனடி பதிலை தெரிவிக்கவில்லை எனவும் ஏதோ மோடி, மகிந்தாவை சந்திப்பதை தட்டிக்கழிக்க முயல்வது போல செய்திகள் வெளிவந்திருந்தன.

டெல்லியில் இந்திய பிரதமர் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பில்

14 ஆம் பக்கம் பார்க்க...

மருது சகோதரர்கள், சிங்காரவேலன், ஜீவானந்தம், ஈ.வே. ராமசாமி போன்ற போராளிகள், மக்களிற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த ஆயிரமாயிரம் மனிதர்கள் களமாடிய தமிழ்மண்ணின் முதல்வர் பன்னீர்செல்வமும் அம்மாவின் தொண்டர்களான மந்திரிகளும் (அம்மாவின் குண்டர்கள் என்று மாறி வாசிக்கக் கூடாது.) கடை கடையாக தேடி அலைகிறார்கள். மக்களிற்காக, நாட்டிற்காக போராடி தலைவர்களாகும் அரசியல் எல்லாம் தேவையில்லை, அம்மாவின் முன்னால் குனிந்தால் போதும் என்று ஒரு புதுவழியை கண்டுபிடித்து இரண்டு முறை முதல்வராகிய மாண்புமிகு முதலமைச்சர் பன்னீர்செல்வம் மிகவும் களைத்து போயிருந்தார். மனைவியின் குங்குமப்பொட்டை விட பெரிதான அவரது குங்குமப்பொட்டு வியர்வையில் கரைந்து போயிருந்தது. (குங்குமப்பொட்டு வைத்தால் சமுதாய பெரும் காய்களும் மக்கள் சொத்தை கொள்ளையடித்து உள்ளே போயிருக்கும் ஊழல் தாய் ஜெயலலிதாவிற்கு ஆதரவாக கூவும் கூச்சல்கள் அ.தி.மு.க அடிமைகளையே கதிகலங்க வைத்து விடும்.

தன் மீதான வழக்கை நீதிமன்றத்தில் சந்திக்க தைரியம் இல்லாமல் பதினேழு வருடங்கள் இழுத்தடித்த ஜெயலலிதாவை சீமான், நெடுமாறன், வை.கோபாலசாமி கும்பல் சிங்கள அரசை எதிர்க்கும் வீரப்பெண்மணி என்றது. ஒரு ரூபாய் சம்பளம் என்று நாடகம் போட்டுக் கொண்டு தன்னை ஆட்சிக்கு கொண்டு வந்த தமிழ்நாட்டு மக்களின் பணத்தையே கொள்ளையடித்த ஜெயலலிதா ஈழமக்களை காப்பாற்ற வந்த ஈழத்தாய் என்று இந்தக் கும்பல், அழிவின் விளிம்பில் தவித்துக் கொண்டிருந்த ஈழமக்களை ஏமாற்றியது. ஈழமக்களின் துயரம் கண்டு தமிழ்நாட்டு மக்கள் எதிர்ப்புக்குரல் கொடுப்பதை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அண்ணனின் நரம்புகள் புடைக்கவில்லை. தொண்டையிலிருந்து ஒரு சொல்லுக்கூட வரவில்லை. "காத்து தான் வருகுது".

"தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் பதவியினை இழந்து சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வு தமிழீழ மக்களுக்கு மிகுந்த மனவேதனையைத் தருகிறது. செல்வி ஜெயலலிதா அவர்கள் 2011 ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக நான்காவது தடவை பதவியேற்ற பின்னர் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவான, உறுதியான, துணிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து வந்தவர். ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றக் காரணமாக இருந்தவர். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகியிருக்கும் கொலைக்கரங்களில் இருந்து தப்பி தமிழ்நாட்டிற்கு வந்த ஈழத்தமிழ்மக்களை இராணுவமுகாம்கள் போன்ற முகாம்களில் அடைத்து வைத்திருக்கும் ஜெயலலிதா ஈழமக்களிற்கு ஆதரவானவராம் அண்ணன் சொல்கிறார்.

ஜெயகுமாரி என்ற தாய் தனது பிள்ளைகளை காணாமல் செய்த இலங்கை அரசை எதிர்த்து போராட்டம் நடத்தியதற்காக பொய்வழக்கு போடப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார். அந்த தாய்க்கு மிஞ்சி இருந்த சின்னஞ்சிறு குழந்தை விபூசிகாவையும் பிரித்து வைத்திருக்கிறார்கள். சப்புரகமுவ பல்கலைக்கழக மாணவன் சந்திரகுமார் சுதர்சனை எந்தவித காரணமும் இன்றி சிறையில் வைத்திருக்கிறார்கள். இவர்களின் துன்பங்களும், துயரங்களும் "பிரதமர்" உருத்திரகுமாரனிற்கும், லண்டனில் கூட்டம் போட்ட கோமாளிகளிற்கும்

# 'ஜாமீன்' என்று ஒரு மீன் கடலிலேயே இல்லையாம்!!



என்ன, நான் பிராமணத்தி தான் என்று சாதித்திமிர் பேசினால் என்ன அவங்களும் திராவிடக் கட்சி தான் என்று சான்றிதழ் தர "தமிழ் உணர்வாளர்கள்" தயாராக இருக்கிறார்கள்.) தேடியது கிடைக்காததால் உள்ளே இருக்கும் அம்மாவிடம் தயங்கியபடியே சொல்கிறார்கள் "அம்மா எல்லா இடமும் தேடி விட்டோம் ஜாமீன் என்று ஒரு மீன் கடலிலேயே இல்லையாம்".

இந்த வடிவேலின் பகிடி அ.தி.மு.க என்னும் முட்டாள், அடிமை, குண்டர்களின் கூட்டத்தில் நடப்பதற்கு எல்லாவிதமான சாத்தியங்களும் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள சில "தமிழ் உணர்வாளர்களும் சில ஈழத்தேசியவாதிகளும் புலம்பெயர் தமிழரின் சமய, தடுப்பதற்காகவே கருணாநிதி, எம். ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற பெருந்தலைகள் எல்லாத்தையும் புடுங்குவார்கள் மற்றவர்கள் ஆணியே புடுங்க தேவையில்லை என்ற வசனத்தை இந்த "தமிழ் உணர்வாளர்கள்" பொறி பறக்க பேசுவார்கள்.

தமது சக்தியை எல்லாம் மக்களிற்காக கொடுத்து தலைவர்கள் ஆன தமிழ் சமுதாயத்தில் தொண்டை கிழிய கத்தி கத்தி பேசி தனது சத்தத்தை கொடுத்து தலைவர் ஆகியவர் செந்தமிழன் சீமான். ஜெயலலிதாவின் இலை மலர்ந்தால் ஈழம் மலரும் என்று அருள்வாக்கு சொன்னவர் ஆளையே காணவில்லை. தமிழ்மக்களின் சொத்துக்கள் கொள்ளை அடிக்கப்பட்டது தமிழீழத் தாயகமக்களால் தமக்கான ஒரு பாதுகாப்புக் கவசமாக உணரப்பட்டவர். இவ்வாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழ் மக்களின் பெயரால் இன்னும் எத்தனை முட்டாள்தனங்களை, அயோக்கியத்தனங்களை இவர்கள் செய்யப்போகிறார்கள். தனது ஊழல்வழக்கை இழுத்தடிப்பதற்காக புலிகளால் தனக்கு பெங்களூரில் ஆபத்து வரலாம் என்ற பச்சைப் பொய்யை நீதிமன்றத்திற்கு சொன்ன ஜெயலலிதா ஈழமக்களின் பாதுகாப்பு கவசமாம் "பிரதம மந்திரி" உருத்திரகுமாரன் சொல்கிறார். சிங்களப் பெருந்தேசியவாதிகளின் தெரியவில்லை. அவர்களை விடுதலை செய்ய சொல்லி நடந்த போராட்டங்கள் இவர்களின் கண்களிற்கு தென்படவில்லை. ஆனால் ஜெயலலிதாவை ஊழலிற்காக கைது செய்தவுடன் இவர்களிற்கு கண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது.

இலங்கை அரசுடன் சேர்ந்து இலங்கைத்தமிழ் மக்களைக் கொன்ற அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் மகிந்த ராஜபக்சவை தண்டிப்பார்கள், தமிழ் மக்களிற்கு தீர்வு பெற்று தருவார்கள் என்று சொல்லும் நாடு கடந்த பிரதம மந்திரி உள்ளூர் கூட்டாளி ஜெயலலிதாவிற்காக கண்ணீர் விடுவது இயல்பான ஒன்று. கள்ளரை கள்ளரே காமுறுவர்.

6 ஆம் பக்க தொடர்ச்சி

திட்டத்தில் உள்ளடக்கிய அதேவேளை - சமவுரிமை இயக்கத்தின் போராட்டங்களுக்கும் ஆதரவு கொடுத்து வரும் புதிய ஜனநாயக மார்க்சிஸ-லெனினிய கட்சி, நவ சம சமாஜக் கட்சி போன்றவற்றுடன் ஏன் உங்களால் இணைந்து செயற்பட முடியாதுள்ளது எனக் கேள்வி எழுப்பினால், சரியான பதில் எதுவும் நேரடியாகக் கிடைக்காது. முக்கி, முனகி இலங்கையில் உள்ள கட்சிகள் எதுவும் மார்க்சிஸ கட்சிகள் இல்லை என்ற பதிலுடன், அக்கட்சிகள் சார்ந்த தனிமனிதர்கள் மீதான அவதூறுகளும், குற்றச்சாட்டுகளும் வானை முட்டுமளவுக்கு முன்வைக்கப்படும். இனித்தான் - இவர்களின் தலைமையில் தான் - இலங்கையில் இனியொரு புதிய மார்க்சிசக் கட்சி கட்டப்படப்போவதாக நீட்டி முழக்குவார்கள்.

ஆனால், தாம் கதைக்கும் மார்க்சிஸ - லெனினியம் சரியானது தானா? அது சரியென்றால், அதன் அடிப்படையில் அரசியலை நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் என்ன? அவ் உபாயங்கள் சரியானால் - அதன் அடிப்படையிலான நடைமுறையில் இவர்கள் இயங்குகிறார்களா? என்பது போன்ற அடிப்படைகளில் இவர்கள் விவாதிக்க விரும்புவதில்லை, கேள்வி கேட்டால் பதில் சொல்லுவதுமில்லை. அடிப்படையில் நடைமுறையை - மக்களுக்கான - மக்கள் விடுதலைக்கான நடைமுறையை மறுப்பவர்களாகவே இருக்கின்றனர் இவர்கள்.

இதற்கான காரணிகளை ஆராய முற்பட்டால் இவர்களிடையே ஆதிக்கம் செலுத்தும் "தமிழ் இனவாதம்", "குறுங்குழுவாதம்", "குழப்பல்வாதம்", "தன்னிலைவாதம்", "சாதிய சிந்தனை", "பிரதேசவாதம்", "பெண்ணொடுக்குமுறை" போன்ற பல படுபிற்போக்கான சிந்தனைகளைப் பதிவுசெய்ய முடியும். ஆனாலும் மிகவும் நலிவடைந்துள்ள தமிழ் இடதுசாரிய அரசியற் தளத்தை வலுப்படுத்த வேண்டுமானால், மேற்படி இடதுசாரியக் குழுக்களையும், தனிமனிதர்களையும் சுயவிமர்சன- விமர்சன அடிப்படையிலும், நடைமுறை அரசியல் வேலைகள் ஊடாகவும், அவர்களின் மேற்கூறிய சீரழிவுச் சிந்தனைகளைக் களைந்து, அமைப்பாக்குவதே, இன்றுள்ள புலம்பெயர் தமிழ் இடதுசாரியத்தின் முதலாவது தெரிவாக உள்ளது .

இனவாதத்தை உபயோகித்தே, பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் இலங்கை மக்கள் அனைவர் மீதும் பேரினவாத ஒடுக்குமுறையாளர்கள் தம் ஆதிக்கத்தை நிறுவியுள்ளனர். அதனால் இலங்கைப் புரட்சியையோ அல்லது தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தையோ முன்னெடுக்க விரும்பினால், அதற்கு முன்நிபந்தனையாக இன்று இலங்கையில் தலைவிரித்தாடும் இனவாதம் ஒழிக்கப்படல் வேண்டுமென்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் அரசியலுக்கு வெளியில் இயங்கும் மார்க்சிஸ- லெனினியம் கதைக்கும் சக்திகள் அனைவரும் தாம் நம்பும் அரசியலுக்காக, தேசிய விடுதலைக்காக, சுயநிர்ணய உரிமைக்காக நடைமுறையில் இயங்க வேண்டிய காலம் இன்று கனிந்துள்ளது.

இந்த வகையில் அனைவரும் ஒரே அமைப்பாக ஒன்றிணையா விட்டாலும், கூடுமான அளவுக்கு அனைவரும் சிறு சிறு அளவிலேனும், நடைமுறையில் அரசியல் வேலைகளை முன்னெடுக்கும் நோக்கில், சமவுரிமை இயக்கத்தின் இனவாத, மதவாத, சாதியவாத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும். அவ்வாறு சமவுரிமை இயக்கத்தின் வேலைகளில் பங்கெடுப்பதன் மூலம் - நடைமுறையில் இயங்கும் போது அவ் அனுபவமும், வேலைமுறையும் வெகுவிரைவாகவே ஒரே புள்ளியில் மக்கள் சக்திகளைச் சந்திக்க வைக்கும். அதன் பின் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கென்பது போல அனைவரும் உண்மையான மக்கள் சக்தியாக மாற முடியும். இணைந்து போராட முடியும்!

5 ஆம் பக்க தொடர்ச்சி

அனுபவிப்பாக காட்டிக் கொள்கின்றது. மனிதனின் கூட்டுப் பண்பாடும், அது சார்ந்த வாழ்வும் உருவாக்கும், கூட்டு உளவியல் உருவாக்கம் மகிழ்வை மனிதன் இன்று இழந்து வருகின்றான். இதற்கு பதில் தனிமனித நுகர்வு முன்னிறுத்திய, மற்றவனின் நுகர்வுக்கு எதிரான சுயவக்கிரத்தை மகிழ்வாக கொள்ளும் லும்பன் பண்பாட்டை சந்தை உருவாக்கி இருக்கின்றது. கடந்தகால கூட்டுப் பண்பாட்டு எச்சங்களை, தனிமனித நுகர்வாக்கம் சார்ந்த சந்தையின் கூறாக்கி வருகின்றது.

தேவைக்காக உழைத்த மனிதன், தன் ஆடம்பர தற்பெருமையை வெளிப்படுத்தும் நுகர்வு வெறிக்காக உழைக்குமாறு கோருகின்றது. தன் ஓய்வுக்காக போராடிய மனிதன், ஓய்வு என்பது சந்தையை நுகருவதற்காகவும், அதை அடைவற்காக போராடுமாறும் மாற்றி விடுகின்றது. மனிதனின் பொழுதுபோக்கு என்பது, ஆடம்பர பொருளைச் சுற்றியதாக அதற்கு அடிமையானதாகவும் மாறி விடுகின்றது.

13 ஆம் பக்க தொடர்ச்சி

பேசப்பட்ட விடயங்களை பார்க்கும் போது இலங்கையில் தமிழ் மொழி பேசும் அனைத்து மக்களையும் இணைத்து தீர்வு ஒன்றிற்கு நரேந்திரமோடி தயாராவது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் உண்மை அதுவல்ல. நாம் இந்திய அரசை புரிந்து கொண்டால், இதன் பின்னால் உள்ள மா்மத்தை அறிந்து கொள்வது இலகுவானது. இந்திய அரசானது இந்திய பெரும் முதலாளிகளினதும் அந்நிய பல்தேசிய கம்பனிகளினதும் நலன்களை பேணுவதற்கான ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பில் பல அரசியல் கட்சிகள், நாற்காலியில் மாற்றி மாற்றி இந்திய பெரு முதலாளிகளாலும் அந்நிய பல்தேசிய கம்பனிகளாலும் அமா்த்தப்படுவார்கள். மக்கள் வரிச்சுமைகளாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் ஆட்சியில் இருக்கும் கட்சி மீது அவநம்பிக்கை கொள்ளும் போது ஆளும் வா்க்கம் ஜனநாயகம் என்ற போா்வையில் தேர்தலை நடாத்தி தமக்கு சார்பான இன்னொரு கட்சியை ஆட்சியில் ஏற்றுகின்றனா் ஜனநாயகம் என்பதன் பெயரில் இது தான் இன்று உலகம் எங்கும் நடக்கின்றது. கடந்த இந்திய பொதுத்தோ்தலின் போது இது வெளிப்படையாக தெரிந்த ஒரு உண்மை. இந்திரா காங்கிரஸினை பதவியில் அமா்த்திய அம்பானி ரிலையன்ஸ் மற்றும் அந்நிய பல்தேசிய கம்பனிகள், மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சியினை ஆட்சிக்கு கொண்டு வர பகிரங்கமாக செயற்பட்டன. மோடி தலைமையிலான அரசாங்கம் இந்திய மற்றும் அந்நிய முதலாளிகளின் நலனுக்காவே அமைக்கப்பட்ட அரசு. அதன் வெளிநாட்டுக் கொள்கையானது முன்னைய அரசு போன்று இந்திய பெருமுதலாளிகளின் நலனுக்கானதே. எனவே வெளிநாட்டுக் கொள்கையில் எத்தகைய மாற்றத்தினையும் எதிா்பார்க்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை விசேடமாக அழைத்து பேசியதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கலாம்.

“ஆசிய பிராந்தியத்தில் வல்லரசு போல் செயற்படும் இந்தியாவின் புதிய அரசு தான் அண்டை நாடுகளின் பிரச்சனைகளில் மிகவும் கரிசனையுடன் அக்கறையுடனும் இருப்பது போன்ற சம்பிரதாய அடையாளத்திற்காக.

“2009 ஆண்டின் பின்னா் வடக்கில் புதிய துாதரகத்தை திறந்து இந்திய பெரும் முதலாளிகளின் வா்த்தகத்திற்கு துணையாக இருந்து வருகின்றது. வன்னியில் பெருமளவு விவசாய நிலத்தினை நீண்டகால குத்தகைக்கு எடுத்திருப்பது, தனியாா் பல்கலைக்கழகங்கள் அமைக்க இலங்கை அரசுடன் ஒப்பந்தங்கள், சம்பூரில் மக்களை பலாத்காரமாக வெளியேற்றி விட்டு இந்தியாவினால் அமைக்கப்படுகின்ற அனல்மின்நிலையம் இப்படி பல இந்திய பெருமுதலாளிகளின் முதலீடுகள் வடக்கு கிழக்கில் கொட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கூடவே அபிவிருத்தி நிதி என கடனாக பல கோடி பணம் கொட்டப்படுகின்றது. மகிந்த அரசு இதற்கு தங்குதடையின்றி திறந்து விட்டுள்ளது. எனவே மகிந்த அரசினை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க வேண்டிய தேவை இந்திய ஆளும் முதலாளி வா்க்கத்தின் தேவையாக உள்ளது.

இதன் வெளிப்பாடாகவே அமெரிக்க அரசால் ஐ.நா மனித உரிமை சபையில் தனது சொந்த பொருளாதார அரசியல் நோக்கத்தில், இலங்கைக்கு எதிராக கொண்டுவந்த தீா்மானத்தை ஆதரிக்காது இந்தியா மௌனம் காத்தது.

இலங்கைச் சிறுபான்மை மக்கள் பிரச்சனையில், இந்திய ஆளும் வா்க்கம் தீா்க்கமான பாத்திரத்தை எடுத்து தமிழ் மொழி பேசும் கட்சிகளை ஒன்றிணைத்து ஐக்கிய இலங்கைக்குள் மாகாண சபைகளிற்கான 13வது சட்ட திருத்தத்தின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஸ வுடன் நேரடி பேச்சுக்கு செல்லுங்கள், மகிந்தா இந்திய அரசுக்கு தான் 13வது சட்ட திருத்தத்திற்கு மேலாக தருவதாக உறுதியளித்துள்ளாா் என்பது சிறுபான்மை இன மக்களின் பிரச்சனைக்கான தீா்வினை நீண்ட காலத்திற்கு இழுத்தடிக்கும் சதியும் இந்திய பெருமுதலாளிகளின் முதலீடுகளை தங்குதடையின்றி திறந்து விட்டுள்ள மகிந்தாவின் அரசை பாதுகாக்கும் தந்திரமும் ஆகும்.

செப்டம்பா் 26ம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற ஐ.நா பொதுச்சபை கூட்டத்திற்கு சென்றிருந்த இந்திய பிரதமா், மகிந்த ராஜபக்சவுடன் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளாா். அதில் சம்பூா் அனல் மின்நிலையம் குறித்தும் இந்திய மீனவா் எல்லை தாண்டி மீன்பிடித்து வருவது பற்றியும் இந்திய முதலீடுகள் பற்றியும் டெல்லியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் நிகழ்ந்த சந்திப்பு குறித்து பேசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய பிரதமா் ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு சில திட்டமான முன்முயற்சிகளை மேற்கொண்டமைக்காக ராஜபக்ச தனது நன்றியினை தெரிவித்து கொண்டாராம். மருந்துக்கு கூட 13வது சட்ட திருத்த அமுலாக்கம் பற்றிய கதை இடம்பெறவில்லை எனவும் அறிய முடிகின்றது.

எனவே மக்களின் விடுதலைக்காக போராடும் அமைப்புக்கள், இந்தியாவினது இந்த சூழ்ச்சி அரசியலை மக்கள் மத்தியில் அப்பலப்படுத்துவது முதன்மையானதாகும். அத்துடன் மக்கள் நலன்களை உயா்த்திப் பிடிக்கின்ற பரந்துபட்ட ஐக்கிய முன்னணி ஒன்றினை இலங்கை ஆளும் வா்க்கத்திற்கும் அந்நிய ஏகாதிபத்தியங்களிற்கும் எதிராக கட்டியமைத்து மக்கள் போராட்ட நடவடிக்கைகளில் மக்களை பயிற்றுவிப்பதும் இன்று எம்முன்னால் உள்ள முதலாய பணியாக அமைகின்றது.

11 ஆம் பக்க தொடர்ச்சி

வளா்த்துக்கொள்கிறது. இந்த நிலையை மக்கள் எவ்வளவு காலத்துக்கு பொறுத்துக்கொள்வாா்கள்? செப்ரம்பா் 20ஆம் திகதி ஊவா தோ்தலில் மக்கள் தமது எதிா்ப்பை அரசுக்கு சிறிய அளவில் வெளிப்படுத்தியுள்ளனா். அரசுக்கு இது காகிதத்தினாலான அம்பினால் எய்யப்பட்ட ஈட்டியாகும். மக்கள் 1947ஆம் 1953ஆம் ஆண்டுகளில் நமது முன்னோா்களின் பாரம்பரிய மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே எமது நாட்டையும், நாட்டின் செல்வங்களையும், மக்களின் உரிமைகளையும், நல்வாழ்க்கையையும் வென்றெடுக்க முடியும்.

15 ஆம் பக்க தொடர்ச்சி

இருந்தும் புத்தரினால் ஆசீர்வதிக்கப்பட்ட சிறீலங்காவில் இருந்தும் அன்னை வேளாங்கன்னி, மடுமாதா, அந்தோனியார் என்று அற்புதங்கள் பல புரியும் இந்த தெய்வங்கள் தங்களை தங்களது சொந்த நாட்டில் ஏன் வாழவிடவில்லை என்று ஒருகணம் யோசிக்க வேண்டும். சொந்த மண்ணில் வாழ வைக்க வக்கில்லாத தெய்வங்களா வெளிநாட்டிற்கு வந்து அருள்மழை பெய்ய போகின்றன என்பதை யோசித்தால் கட்டிடம் காலியாக இருக்கும் இடங்களில் எல்லாம் தெய்வீகக்கடை திறக்கும் கயவர்கள் காணாமல் போவார்கள்.

# மத வியாபாரிகளும் ஏமாறும் மக்களும்

இந்த தமிழினத்திற்காக தம்மை இழந்த போராளிகளின் தாய், தந்தையர்கள், கணவன், மனைவி, குழந்தைகள் வீழ்ந்து போன வாழ்வின் துயருறும் கனவுகளில் திடுக்குற்று எழுகிறார்கள். மூச்சு விட முடியா வறுமையில் வாழும் அவர்களை முடிவற்று நசுக்குகிறது பேரினவாதம். உயிர் தப்பிய போராளிகளால் வறுமைக்கு தப்ப முடியவில்லை. ஆழ்ந்தடங்கி அச்சத்துடன் வாழ்கின்ற போதிலும் அவ்வப்போது அவர்களை இராணுவத்திடம் காட்டிக் கொடுக்கிறார்கள். நாட்டை விற்கும் மகிந்த ராஜபக்சவின் பொருளாதாரக் கொள்ளைகள் மக்களைப் பட்டினி போடுகின்றன.

போரின் கொடிய நினைவுகள் கருமேகங்களாய் மக்களின் மனதுகளில் படிந்து போய் உள்ளன. தற்கொலை செய்பவர்களின் விகிதாசாரத்தில் உலக அளவில் நான்காவது இடத்தில் இலங்கை இருக்கிறது. இலங்கையின் தமிழ்பிரதேசங்களிலேயே மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் உள்ளனர். வறுமையின் கொடுமை தாளாமல் தன் குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்த தமிழ்த்தாய் ஒருவரின் மரணம் கேட்டு எழுந்த அழுகைகள் நெஞ்சக்கூட்டில் இன்னும் முனகி கொண்டிருக்கின்றன.

இங்கு அய்ரோப்பாவில் ஒரு அயோக்கியக் கூட்டம் ஆன்மீகம், பக்தி, கோயில் என்று கதை சொல்லி காசு சேர்க்கிறது. தமிழ்மக்களும், தமிழ்மக்களிற்காக போராடியவர்களும் பசியிலும், பட்டினியிலும் வாடும் போது இந்த அயோக்கியக்கூட்டம் தெருவிலே உணவை வீசுகிறது. கடந்தவாரம் பாரிஸ் பிள்ளையார் கோயில் தேரின் போது ஆயிரக்கணக்கான தேங்காய்கள் தெருவிலே உடைக்கப்பட்டன. தேங்காய் உடைத்த மறுகணம் அதை பாரிஸ் மாநகராட்சியின் துப்பரவுப்பணியாளர்கள் குப்பை வண்டிக்குள் எடுத்துப் போட்டார்கள். மாநகராட்சிக்கு கட்டணமாக முப்பதினாயிரம் ஈரோக்கள் வழங்கப்பட்டதாம். தேங்காயை தெருப்புழுதியில் உடைத்து அதை குப்பை வண்டிக்குள் போட பல்லாயிரக்கணக்கில் செலவழிக்கிறார்கள் இந்த மண்டை கழண்ட பரதேசிகள்.


தமிழுக்கு தொண்டு செய்கிறோம், தமிழ்ப்பண்பாட்டை பரப்புகிறோம், தமிழனை நல்வழிப்படுத்த கோயில்கட்டுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இந்தக் கூட்டம் தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும் அழிக்கிறது. தமிழனை மூடநம்பிக்கைகளில் அமிழ்ந்து போக வைக்கிறது. கோயில்கள், சங்கங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என்று எங்கும் இந்த முட்டாள்களின் கூட்டம் வாயைப் பிளந்து கொண்டிருக்கிறது. தமிழ்ச்சினிமா கோமாளிகளை கூப்பிட்டு உளற வைப்பது தான் இதுகளின் கலைச்சேவை. தமிழரை சூத்திரர், தாசி மக்கள் என்று சொல்லும் மக்கள்விரோத பார்ப்பனியத்தை தமிழ்மக்களின் சமயம் என்று சொல்வது தான் இதுகளின் சமயத்தொண்டு.

> **“ பாரிஸ் பிள்ளையார் கோயில் தேரின் போது ஆயிரக்கணக்கான தேங்காய்கள் தெருவிலே உடைக்கப்பட்டன. தேங்காய் உடைத்த மறுகணம் அதை பாரிஸ் மாநகராட்சியின் துப்பரவுப்பணியாளர்கள் குப்பை வண்டிக்குள் எடுத்துப் போட்டார்கள். மாநகராட்சிக்கு கட்டணமாக முப்பதினாயிரம ஈரோக்கள் வழங்கப்பட்டதாம். ”**

அன்று தொடக்கம் இன்று வரை சமயங்கள் அதிகாரவர்க்கங்களின் மக்கள் விரோதிகளின் ஆயுதமாகவே இருக்கின்றன. தமிழ்மக்களின் இயற்கை வழிபாடுகளை அழித்துக் கொண்டு பார்ப்பனிய இந்துமதம் வந்தது. முஸ்லீம் மன்னர்களின் படையெடுப்பால் இஸ்லாம் வந்தது. அய்ரோப்பியர்களிற்கு அடிமைப்பட்டபோது கிறீஸ்துவத்தின் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து பிரிவுகள் வந்தன. இப்படித் தான் எல்லா நாட்டிலும் சமயங்கள் வந்தன. இவர்கள் எல்லோரும் மக்களைக் கொன்றார்கள். நாடுகளைக் கொள்ளை அடித்தார்கள். எடுத்ததெற்கெல்லாம் வரி போட்டு ஏழைமக்களை கசக்கி பிழிந்தார்கள். மக்களை மனிதர்களாக மதிக்காத இவர்கள் மக்களின் மீது கருணை கொண்டு தங்களது சமயங்களை அவர்களிற்கு பரப்பினார்களாம். வாள்முனையிலே ஆட்சி செய்த இவர்கள் மக்களது வாழ்வை மேம்படுத்த அன்புடன் ஆன்மீகத்தை அளித்தார்களாம்.

ஆனை, குதிரை, ஆள், அம்பு என்று படை வைத்திருந்த இவர்கள் "அன்பே சிவம்", "ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை காட்டு", "அகிம்சை தான் பௌத்தத்தின் அளப்பரிய தத்துவம்", "இஸ்லாம் சமாதானத்திற்கான மதம்" என்று மக்களை அமைதியாக இருக்கச் சொன்னார்கள். அதாவது இவர்களது அக்கிரமங்களை, அநியாயங்களைக் கண்டு மக்கள் கோபம் கொள்ளக்கூடாது என்பதற்காகத் தான் இந்த மூளைச்சலவை. மக்களை மயக்கி தமது கொள்ளைகளை தடையின்றி தொடர்வதற்கு தான் மதம் என்ற அபின் அவர்களிற்கு தேவைப்பட்டது. மன்னனும் கடவுளும் ஒரே ஆளின் டபுள் அக்டிங் தான் என்று மதகுருமார்கள் தமிழ்படத்து கண்றாவி கதைகள் போல தத்துவ விளக்கம் அளித்தார்கள்.

மேற்குநாடுகளில் அறிவுவளர்ச்சி, பகுத்தறிவு என்பவற்றின் காரணமாக கிறீஸ்தவ தேவாலயங்கள் ஆளில்லாமல் மூடப்படுகின்றன. மதநம்பிக்கை உடையவர்களும் சடங்குகள், சம்பிரதாயங்கள் என்று எதையும் பெரும்பாலும் பின்பற்றுவதில்லை. திருமணம், மரணம் போன்ற நிகழ்வுகளிற்கு தான் எப்போதாவது தேவாலயங்களிற்கு போகிறார்கள். பின்தங்கிய நிலப்பிரபுத்துவ சிந்தனைகளுடன் வரும் மூன்றாமுலக நாடுகளை சேர்ந்தவர்களின் மூடநம்பிக்கைகளை வியாபாரிகள் பயன்படுத்திக் கொண்டு கோயில்களை, தேவாலயங்களை, மசூதிகளை, விகாரைகளை திறக்கிறார்கள். இந்துக்களின் புண்ணிய பூமிகளான இந்தியா, இலங்கையிலே இருந்தும் இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய சாரியா சட்டம் இருக்கும் முஸ்லீம் நாடுகளில்



14 ஆம் பக்கம் பார்க்க...

# போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய.
தொலைபேசி/தொலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

## ஐரோப்பிய நீதிமன்றத்தின் புலிகள் மீதான தடைநீக்கலும், மகிந்தவுக்கு வாய்த்த அதிர்ஸ்டமும

வருடக் கடைசியில் சிலருக்குக் கிடைக்கும் வெகுமதியினைப் போன்று அரசாங்கத்துக்கும் ஒருவித வெகுமதி வந்து வாசல் கதவைத் தட்டுகிறது. அதுவும் ஜனாதிபதிக்கான தேர்தல் நெருங்குகின்ற வேளைப் பொருத்தமாக அதிர்ஸ்டம் தேடிவந்திருக்கின்றது. தேர்தல் பிரச்சாரத்துக்கு அவர்களுக்கு மக்கள் மத்தியில் தேர்தல் கோஷமாக எடுத்துச் செல்ல மிக அருமையான தேடற்கரிய வாய்ப்பாகவும் இது வந்திருக்கின்றது. முன்னர் தீர்மானிக்கப்பட்ட கோஷம் மக்கள் விடுதலை முன்னணிக்கு பிரியாவிடை வழங்குவதாயிருந்தது. மக்கள் விடுதலை முன்னணி மகிந்தாவுக்கு மூன்று தடவைக்கு மேல் முடியாது என்ற தயாரிப்பில் இருக்க, மகிந்தாவால் முடியும் என்பதற்கு இவ்வறிவிப்பு வழிவகுத்திருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியினர், மகிந்தாவால் மூன்று தடவைக்கு மேல் முடியாது என்பதை அடிப்படையாகக் கொண்டு தங்களது பிரச்சாரங்களை முன்னெடுக்கவிருந்த வேளை அரசாங்கத்துக்கு புதியதொரு பொக்கிஷமாக வந்து வாய்த்தது ஐரோப்பிய யூனியனின் புலிகள் மீதான தடைவிலக்கல் அறிவிப்பு. அரசாங்கம் இதனை பாவித்து தன்னை பிரச்சாரப்படுத்துவதற்கு அத்தனை முயற்சிகளையும் முடுக்கிவிட்டுள்ளது. ஊடகங்களின் பிரச்சாரங்கள் புலிகளை பேயாகவும் மக்களின் பாதுகாவலன் மகிந்தாவென்றும் சித்தரிப்பது ஒருபுறத்திலும், புலிகளை தடைசெய்யுமாறு கோரி 5 மில்லியன் கையெழுத்து வேட்டைக்கான பிரச்சாரம் மறுபுறத்திலுமாக நடக்கின்றது. இந்த இரண்டு பிரச்சாரங்களும் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கு வலுச்சேர்ப்பவையான அமைந்துள்ளன.

புலிகள் என்ற இயக்கம் பிரபாகரன் என்ற மனிதனுடைய பிறழ்வின் விளைவானதல்ல. சிக்கலான சமூகப் வரலாற்றுப் பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களால் உருவானதாகும். புலிகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டுப் பார்த்தால் கூட, தமிழ் சமூகம் கொண்டுள்ள இனப்பகைமை, தேசியவாதம், தனிமைப்பட்டுள்ளதான போக்குகள் என்பனவற்றின் விரைவான வளர்ச்சி தற்செயலானதல்ல. அப்படிப்பட்ட போக்குகள் பலம் பெறுவதை தடுப்பதற்கு யாராவது விரும்பினால், நடந்தவைகளுக்குள் ஒரு ஆழமான பகுப்பாய்வொன்றினை நடாத்துவதற்கும் இந்த தவறுகள் எவ்வாறு திருத்தப்பட முடியும் என்பதற்கான ஆய்வினையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கான முன்நிபந்தனையாக இருப்பது போருக்கு முன்னராக இருந்த மனோபாவங்களிலிருந்து வெளிவருவதும் மற்றும் புதிதாக சிந்திப்பதற்கு தயாராவதுமாகும். எனினும், ஒவ்வொரு நெருக்கடியிலும் எல்லாப் பிரச்சனைகளுக்குமான தீர்வாக, அரசாங்கம் ஒரு யுத்த மனநிலையை விதைக்கின்றது. அரசாங்கத்தின் மீது அதிருப்திகொண்டு விலகிச் செல்லும் மக்களை, புலிகள் என்ற பூச்சாண்டியைக் காட்டி மீளவும் தன்னை நோக்கி இழுத்து வர அது முயலுகிறது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கைவிடுதல் போன்ற பிரச்சனைகள் ஆட்சியாளர்களை அடியாழத்திற்கு அமிழ்த்திச் செல்லுகின்ற போதெல்லாம் அவர்கள் எல்லாப் பிரச்சனைகளுக்குமான மருந்தாக இதனையே தூக்கி நிறுத்துகிறார்கள். தற்போது ஜனாதிபதி, பிரிவினைவாதம் என்பதற்கு முடிவு எட்டப்படுகின்றபோதே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை தன்னால் கைவிட முடியும் என்கின்றார்.

அரச ஊடகங்கள் புலிகள் மீதான தடைவிலக்கல் காரணமாக தமிழ்சமூகத்தின் மத்தியில் இனவெறிச் சக்திகள் வலிமைபெற்று வருகிறார்கள் என்பதான அபிப்பிராயத்தினை உருவாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். பிரச்சனையானது தமிழ் மக்கள் மத்தியில் இனப்பகைமைக் கருத்துக்களைப் பரப்புபவர்களிடம் அல்ல, ஆனால் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒட்டுமொத்த சமூகத்திடமே இருக்கின்றது. யாராவது தமிழ் இனக்குரோத மனப்பாங்கு வளர்க்கப்படுவதை விரும்பாதவர்களாக இருப்பின், அதற்கான விடை அந்த மனப்பாங்கை வளர்க்கும் அரசியல் காரணங்களைக் களையும் வகையில் அமையும் மாற்று அரசியலில் தம்மை இணைத்துக் கொள்வதினூடாகவே பெறப்படும். ஆனால் அப்படிப்பட்ட இனக்குரோதத்தினை பலப்படுத்தும் அரசியலிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் இனவுணர்ச்சியை நியாயப்படுத்துகின்ற வகையிலேயே அரசாங்கத்தின் அரசியல் அமைந்துள்ளது. காணாமற்போனவர்கள் பிரச்சனை, அரசியற் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், தாம் விரும்பும் அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு வடக்கு கிழக்கு மக்கள் உரிமையற்றிருப்பது, வடக்கில் இராணுவமயமாக்கல் போன்றவை பற்றி நாம் எல்லோரும் அறிவோம். வடக்கில் நில அபகரிப்பு பற்றி அறிவோம். இலங்கைக்குள் வெளிநாட்டவர் விசா பெற்று வருவது போன்ற நடைமுறை போலவே, வடக்குக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் மீண்டும் ஒரு அனுமதி பெற்றிருக்கவேண்டும் எனக் கோருகின்ற அண்மைய சட்டம் பற்றி நாம் அறிவோம். இவைகள் எல்லாம் இனவுணர்வுகளை நியாயப்படுத்துதற்கு ஏதுவானவைகள், அவற்றிலிருந்து மீள்வதற்கு பிளவு ஒன்றே வழி என்று எண்ண வைப்பதற்கு ஏதுவானவை. உண்மையான பிரச்சனை ஐரோப்பிய யூனியனின் அரசியலுக்குள் அல்ல, இலங்கையின் அரசியலுக்குள்ளேயே இருக்கின்றது.

ஐரோப்பிய யூனியனின் தீர்மானமாக தடைவிலக்கல் குறிப்பிடப்படுகின்ற போதிலும், இத்தீர்மானம் நீதித்துறையினாலேயே எடுக்கப்பட்டிருக்கின்றது, அரசியற் தலைமைகளினால் அல்ல. நீதித்துறையினால் கொண்டுவரப்பட்ட இந்த தீர்ப்பு நீதிமன்றத்தினாலேயே கையாளப்படுதலன்றி கையொப்பங்கள் சேகரிப்பதனால் பயனெதுவும் இல்லை என்பது அரசாங்கத்துக்கு முழுவதுமாகத் தெரியும். இருந்தபோதும் ஜனாதிபதித் தேர்தலுக்கான முக்கிய விவகாரமாக இது இப்போது வந்துள்ளது. அரசாங்கம் புலிகளைப் போன்ற அமைப்புக்கள் எழுச்சிபெறுவதற்கான காரணங்களை புரிந்துகொள்வதற்குரிய பகுப்பாய்விற்கான விமர்சனங்கள், உரையாடல்கள் இல்லாது புலியெதிர்ப்பு கொடியை தூக்குவது அரசாங்கத்துக்கு அனுகூலமாக இருக்கக் கூடியது. ஆனால் சமூகத்துக்கு தீமைகளையே தருவது. இந்த வகையான குறுகிய அரசியல் பல வருட போருக்குள் நாட்டை இழுத்துச் செல்வதற்கு வழிசமைக்கும். முந்தைய யுத்தம் 30 வருடங்களாக நீடித்தது. அடுத்ததும் கூட அவ்வாறே அமையக் கூடும். புலிகளையும் ஐரோப்பிய யூனியனைப் பற்றியும் பேசுவது நன்றாகவே இருக்கும் ஆனால் அதேவேளை அரசாங்கத்தின் புதுவருட வெகுமதிக்காக நாம் இரத்தத்தையே விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை மனதிற் கொள்ளவேண்டும்.




**கேகாலை மாவட்ட ரூவான்வெல நகரத்தில் முன்னிலை சோசலிசக் கட்சி உறுப்பினர்கள் நிதிசேகரிக்கும் காட்சிகளையே படத்தில் காண்கிறீர்கள்.**



இலண்டன் வெம்பிளியில் ஒக்ரோபர் 25 ம் திகதி “வசந்தத்தைத் தேடுகிறோம்” என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கலைவிழாவில் குழுமியிருந்தோரில் ஒரு பகுதியினரையும், ”இவைகள் யாழின் பனித்துளிகள் அல்ல”˙ என்னும் தலைப்பிலான புகைப்பட கலைஞர் நயனஹரி அபநாயக்கவினது ஆவணப் புகைப்படக் கண்காட்சியை அலங்கரித்த புகைப்படங்களையும் மேலே காண்கிறீர்கள். அதே தொனிப்பொருளில் ஒக்ரோபர் 19 ம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கலைவிழாஅரங்கில் குழுமியிருந்தவர்களில் ஒரு பகுதியினரையும், புகைப்படக் கண்காட்சியையும் கீழேயுள்ள படத்தில் காண்கிறீர்கள்.



41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்னிபிட்டிய் வசிக்கும் ஜூட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.